பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 20 வெள்ளிக்கிழமை 03.06.2022 கதிர் 210

### இனிது ரகசியம் அல்ல!

21ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் முடிவு செய்வதற்கானகட்சித்தலைவர்களின் கூட்டம் இன்று நடைபெறுகின்றது.

21 ஐ நிறைவேற்ற விடாது ஆளும் பொதுஜனப் பெரமுனவின் பஸில் தரப்புப்

2

# நிவாரண விநியோகத்தை உடன் நிறுத்த உத்தரவு!

## அரசியல்வாதிகளின் தலையீடு தாராளம் என்ற குற்றச்சாட்டால் பிரதமர் அலுவலகம் பணிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 03

தமிழ்நாடு அரசின் உதவியாகக் கிடைக்கும் நிவாரணப் பொருள்களை மக்களுக்கு வழங்குவதில் உள்ளூர் அரசியல்வாதிகளின் தலையீடு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்படும் நிலையில், அந்த நிவாரணப் பொருள்களின் விநியோகத்தை உடன் நிறுத்துமாறு பிரதமர் அலுவலகத்தால் மாவட்டச் செயலகங்களுக்கு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2

## ‘ஒரு நாடு; ஒரே சட்டம்’ செயலணியின் பதவிக் காலம் 3 வாரங்களுக்கு நீடிப்பு



வண. ஞானசார தேரர் தலைமையிலான ’ஒரு நாடு;ஒரே சட்டம்’ தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பதவிக்காலம் மேலும் 3 வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

2

## இரண்டு மோ.சைக்கிள்களை கொள்ளையிட்ட சிப்பாய்கள்



கொலன்ன புதிய நகரில் வசித்து வரும் இரண்டு இளைஞர்களுக்குச் சொந்தமான – சுமார் 7 லட்சம் ரூபாய் பெறுமதியான – இரண்டு மோட்டார் சைக்கிள்களைக் கொள்ளையிட்டவர்கள் என்று கூறப்படும் இரண்டு

2

## எல்பிட்டியவில் வீடொன்றில் நேற்று திடீர் குண்டு வெடிப்பு



எல்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாகஹதெனெ்ன, கஜுகஸ்வத்த பிரதேசத்தில் வீடொன்றின்

2

## ஜப்பான் - இலங்கை இரு தரப்பு உறவுகள் முறிந்து போய் விட்டன என்கின்றார் ரணில்



ஜப்பானுடனான உறவுகள் முறிந்துவிட்டன எனவும், அந்த உறவை சரி செய்து அவர்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க சிறிது காலம் செல்லும் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு கூட்டமைப்புகளின் பிரதிநிதிகளுடனான நேற்றைய சந்திப்பின் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார் எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

4

## அதிகாலை கோர விபத்து; தாயும் மகளும் உயிரிழப்பு



### தந்தையும் மகனும் படுகாயம்

ஏ - 9 பிரதான வீதியின் கவரக்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் தாயும் மகளும் உயிரிழந்துள்ளனர்.

பலத்த காயமடைந்த

2

## வவுனியா ஈரட்டைபெரியகுளத்தில் மூழ்கிய 4 மாணவரில் இருவர் சடலங்களாக மீட்பு!

### மற்றிருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்



வவுனியா ஈரட்டைபெரியகுளத்தில் நேற்று மதியம் நான்கு மாணவர்கள் நீரில் மூழ்கிய நிலையில் இருவர் சடலமாகவும் இருவர் ஆபத்தான நிலையிலும் மீட்கப்பட்டுள்ளனர்

வவுனியாவை சேர்ந்த 15,16ஆகிய வயதுகளையுடைய மாணவர்கள் நேற்று மாலை

2

## தீவகத்தில் கரை ஒதுங்கும் கிருமி நாசினிப் புட்டிகள்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 03

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற சமயம் இலங்கை கடற்படையினரைக் கண்டு கடத்தல்காரர்கள் கடலில் வீசியவை எனக் கருதப்படும் கிருமி நாசினிகள் அடங்கிய 34 மூடைகள் யாழ்ப்பாணம் தீவகத்தில் கரை ஒதுங்குகின்றன.

தமிழ் நாட்டில் இருந்து

2



## இலங்கையை விட்டு ரஷ்ய விமானம் ஒன்று புறப்படுவதற்குத் தடை

ரஷ்ய ஏரோஃப்ளோட் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவின் பிரகாரம், ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்குச் செல்ல விருந்த ஏ330 ரக விமானம் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அயர்லாந்து நிறுவனமான Celestial Aviation Trading Limited நிறுவனம் தாக்கல் செய்த முறைப்பாட்டை

2

## கச்சைதீவை இந்தியா மீளப்பெறுவது இலங்கைத் தமிழ் மீனவருக்குப் பாதிப்பு

### அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் விளக்குகிறார்

கச்சைதீவை மீளப்பெறுவதன் காரணமாக எங்களுடைய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பதனை மிகவும் அனுதாபத்துடன் மு.க.ஸ்டாலினிடம் தாம் தெரிவிக்கிறார் என வடமாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் குறிப்பிட்டார்.

நேற்றையதினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கச்சதீவு மீட்பு தொடர்பாக தமிழக மீனவர் சார்ந்த கருத்தை தமிழ் நாட்டு முதல்வர் மு. க.ஸ்டலின் தெரிவித்தமைக்கு ஆதரவாகத் தேசிய ரீதியாக அண்ணாமலையும் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஸ்டாலினைப் பொறுத்தவரையில் அவரை உலகத் தமிழர்களின் தலைவராக நாம் பார்க்கின்றோம். உலகத் தமிழர்களின் தலைவராக நாம் அவரைப் பார்க்கின்ற பொழுது, அவருக்கு இலங்கைத்

2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
போட்டுக் குழப்பிக்கொண்டு இருப்பதாகத்தான் வெளியில் பேச்சு.

21 ஆவது திருத்தம் தற்போதைய நகல் வரைவு வடிவத்தில் நிறைவேற்றப்பட்டால், இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் எம்.பியாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டு விடும், அதனால் பஸில் ராஜபக்ஷ தமது எம்.பி. பதவியை இழப்பார், அதன் காரணமாக அந்த விடயத்தை உள்ளடக்கியதான – எம்.பி. பதவியைத் தகுதியீனமாகும் ஏற்பாடாக இரட்டைப் பிரஜாவுரிமையை வெளிப்படுத்தும் சரத்துடன் – நிறைவேற்ற விடக்கூடாது என்பதில் பஸில் தரப்பு அடம்பிடிக்கிறது என்றெல்லாம் செய்திகள் வெளியாகின.

இதில் அரைவாசிதான் உண்மை. அரைவாசி பொய்.

பஸிலின் தரப்பு அடம்பிடிப்பது உண்மைதான். இரட்டைப் பிரஜாவு ரிமை கொண்டவர்கள் எம்.பியாக இருக்க முடியும் எனும் ஏற்பாட்டில் மாற்றம் கொண்டு வரக்கூடாது என்று அவர்கள் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதும் வாஸ்தவம் தான்.

எனினும் அது அந்தச் சரத்தை தக்க வைப்பதற்கு அல்ல, அதை வைத்து எதிரணியுடன் டீல்களைப் போடுவதற்காகத்தான் அப்படிப் பிடிவாதம் பிடிக்கின்றது பஸில் தரப்பும்.

பஸிலுக்குத் தொடர்ந்தும் எம்.பியாக இருக்கும் எண்ணம் கிஞ்சித்தும் இல்லை என்கின்றன உள்வீட்டு வட்டாரங்கள்.

ஏற்கனவே அவருக்கு (பஸிலுக்கு) முதுகெலும்பில் வருத்தம். இந்த அரசியல் நெருக்கடிகளிலிருந்து எல்லாம் விடுபட்டு, அமெரிக்காவுக்குப் போய், ஓய்வெடுத்தபடி மருத்துவ சிகிச்சை செய்வதையே அவர் விரும்புகிறார்.

தாம் தமது எம்.பி. பதவியை விட்டு விலகியதும் – அல்லது அதிலிருந்து தான் நீக்கப்பட்டதும் – அந்தத் தேசிய பட்டியல் நியமனத்தை தமது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிர்வாகச் செயலாளரான ரேணுகா பெரேராவுக்கு வழங்குவது என்ற முடிவைக் கூட அவர் தீர்மானித்து விட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் என்ற தமது பதவியைக் கூட தமது பெறா மகன் நாமல் ராஜபக்ஷடம் கொஞ்சம் கொஞ்சமாக அவர் ஒப்படைத்து வருகின்றார்.

இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான 21 ஆவது திருத்தச் சரத்து நேரடியாகப் பஸிலைப் பாதிக்கும், அதனால் அதனை எதிர்க்கின்றோம் என்ற நிலைப்பாட்டை கடைசிவரை தீவிரமாக வைத்திருந்து, 21 ஆவது திருத்தம் தொடர்பான ஏற்பாட்டின் ஏனைய விடயங்களில் அதைப் பேரமாகப் பயன்படுத்த பஸில் தரப்பு விழைகின்றது.

இன்றைய நிலைமையில் 21 ஆவது திருத்தத்தில் 3 விவகாரங்கள்தான் இன்னும் சிக்கலில் இருக்கின்றன.

ஒன்று – ஜனாதிபதி சில அமைச்சுக்களை தம் விருப்பப்படி தம்முடன் வைத்திருக்கலாம் என்ற சரத்து.

இரண்டவது – ஜனாதிபதி தாம் விரும்பிய சமயத்தில் பிரதமரைப் பதவி விலக்கலாம் என்பதற்கு இடமளிக்கும் ஏற்பாடு.

மூன்றாவது – யார், யாரை அமைச்சராக நியமிக்க வேண்டும் என்பது தொடர்பில் பிரதமரின் பரிந்துரையை ஏற்க வேண்டிய கடப்பாடு கொண்டுள்ள ஜனாதிபதி, எந்த அமைச்சருக்கு, எந்த அமைச்சை அல்லது துறையை ஒதுக்கீடு செய்வது என்பது குறித்துத் தானே (ஜனாதிபதியே) தீர்மானிக்கலாம் என்று சரத்து.

இந்த மூன்று விடயங்களிலும் ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்வதை எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து உறுதிப்படுத்தினால், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் எம்.பியாக இருக்க முடியும் என்ற சரத்தை கைவிட ஆளும் தரப்பு இணங்கும் என்று தெரிவிக்கும் பேரப் பேச்சுகள் ஆரம்பித்துள்ளன என்றும் தகவல்.

இந்த மூன்றிலே ஜனாதிபதி தாம் விரும்பினால் பாதுகாப்பு அமைச்சை மட்டும் தம்முடன் வைத்திருக்கலாம் என்று திருத்தத்துக்கு எதிர்க்கட்சிகள் இப்போதைக்கு இணங்கி இருக்கின்றன என்று தெரிகிறது.

ஆக மேற்படி மூன்று விடயங்களிலும் சில மாற்றங்களுடன், 21ஆவது திருத்தம் சுலபமாக நிறைவேறும் என்று கள முனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் எம்.பிக்கள் ஆகத் தொடர முடியாது என்ற சரத்தை பஸில் தரப்பு இறுகப் பற்றித் தடுத்து நிற்காமல், ஒரு கட்டத்தில் இந்த நிலைப்பாட்டை பஸில் தரப்பினர் விட்டுக் கொடுப்பர் என்றே தெரிகின்றது.

ஆக, ஒரு சில மாற்றங்களுடன் 21 ஐ நிறைவேற்றும் இணக்கம் வந்து விடும் என்றே தோன்றுகின்றது.

இதற்கிடையில் –

இதுவரை ஜனாதிபதி கோட்டாபயவைச் சுற்றி நின்ற அதிகாரிகள் பட்டியலில் பீ.பீ. ஜயசுந்தர, முன்னாள் கடற்படைத் தளபதி ஜெயநாத் கொலம்பகே போன்றோர் ஜனாதிபதியை விட்டு விலகி விட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஜனாதிபதி பதவிக் காலம் முழுவதும் அவருக்குச் செயலாளராக இருந்தவரும், தற்போதைய ஜனாதிபதியின் ஆலோசகராகச் செயல்படுபவருமான லலித் வீரதுங்க போன்ற பல அதிகாரிகள் ஜனாதிபதியை சூழவுள்ள பதவிகளிலிருந்து விலகி ஒதுங்குவதற்கு முடிவு செய்து விட்டனர் என்றும் தகவல் கிடைத்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்கவிருக்கின்றார். குறைநிரப்பு பிரேரணை ஒன்றையும் முன்வைக்க போகின்றார். அவரின் உத்தேச இடைக்கால வரவு – செலவுத்திட்டம் எப்படி அமையும் என்பதற்கான முன்னோட்டமாக செவ்வாயன்று அவர் சமர்ப்பிக்கும் அறிக்கையை நாம் காணக் கூடியதாக இருக்கும். அதையும், குறை நிரப்பு பிரேரணை ஒட்டியும் செவ்வாய், புதன் கிழமைகளில் நடைபெறும் நாடாளுமன்ற விடயங்களில் நெருக்கடிகால புள்ளிவிவர உண்மைகளை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று நாம் நம்பலாம்.

– மின்னல் –

## எல்பிரட்டியவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பின்புறம் வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) காலை 9.20 மணியளவில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்து சிதறியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த குண்டுவெடிப்பில் அருகில் உள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளன. வீட்டின் உரிமையாளர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என எல்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கையை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
விசாரித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர் சேதுங்கவினால் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு வரும் 16 ஆம் திகதி வரை அமலில் இருக்கும்.

பிரதிவாதி விமான சேவைக்கு சொந்தமான விமானம் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் உத்தரவைக் கோரி முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாட்டை பரிசீலித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

## அதிகாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தந்தை மற்றும் 11 வய தான மகன் ஆகியோர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த இவர்கள், பயணித்த ஓட்டோ நேற்று அதிகாலை 5.29 மணியளவில் கவரக்குளம் பிரதேசத்திலுள்ள ஓடை யொன்றுக்குள் குடைசாய்ந்துள்ளது.

ஓட்டோ சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கான காரணமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். விபத்தில் 40 வயதான தாயும் 13 வயதான மகளுமே உயிரிழந்துள்ளனர்.

## நிவாரண விநியோகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கை மக்களுக்காகத் தமிழ்நாடு அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட நிவாரணப் பொருள்களின் விநியோகங்களில் அரச நிர்வாக இயந்திரம் தவிர்ந்த அரசியல்வாதிகள் பங்குகொள்வது எதிர்கால நிவாரண விநியோகங்களில் தாக்கம் செலுத்தும் எனச் சுட்டிக்காட்டப்பட்டதனால் இதுவரை விநியோகிக்காத நிவாரண விநியோகங்களை உடன் நிறுத்துமாறு பிரதமர் அலுவலகம் நேற்று அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களின் பிரத்தியேகச் செயலாளர்கள் உட்பட எந்த அரசியல் வாதிகளினதோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளினதோ பங்களிப்பு இன்றி நிவாரண விநியோகம் சரியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் சென்றடைவதை உறுதி செய்யுமாறு மாவட்ட நிர்வாக அதிகாரிகள் ஊடாக பணிப்புரைகளும் அறிவுறுத்தலும் வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

நிவாரணப் பொருள்களைப் பெறுவோரின் பட்டியல், வழங்கப்படும் பொருள்களின் அளவு போன்றவற்றைத் தீர்மானிப்பதிலும் அரசியல்வாதிகளினதோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளினதோ பங்களிப்பு இருக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தப்படவிருப்பதாகவும் தெரிய வந்தது.

இதற்கமைய இன்று நிறுத்தப்படும் நிவாரண விநியோகம், அதற்கான முறைமை ஒழுங்கமைக்கப்பட்ட பின்னர், அதனடிப்படையில் அடுத்த வாரம் முதல் விநியோகிக்கப்படுவதற்கு வழிகாட்டல் கிடைக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரண்டு மோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இராணுவச் சிப்பாய்கள் மற்றும் இராணுவத்தில் இருந்து தப்பி வந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திஸ்ஸமஹாராம லுணுகம்வெஹெர பிரதேசங்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்தக் கொள்ளைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மற்றுமொரு மோட்டார் சைக்கிளும் பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக எம்பிலிப்பிட்டிய பணாமுர, மொனராகலை நக்கல மற்றும் அரலங்கவில பகுதிகளை சேர்ந்த சந்தே நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் இரண்டு பேர் இராணுவத்தில் கடமையாற்றி வருகின்றனர். விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ளனர். மற்றைய சந்தேக நபர் இராணுவத்தில் கடமையாற்றிய நிலையில் தப்பியோடியவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். கொலன்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியா ஈரட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஈரட்டைபெரியகுளத்திற்கு சென்றுள்ளனர். நான்கு மாணவர்களும் இணைந்து தமது வளர்ப்பு நாயை குளிர்ப்பாட்டி நீராடிக் கொண்டிருந்த சமயத்தில் நான்கு மாணவர்களும் நீரில் மூழ்கியிருக்கின்றனர்.

இதன் போது இருவர் ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து அயலவர்களின் உதவியுடன் குளத்தில் தேடுதல் நடவடிக்கையினை மேற்கொண்ட சமயத்தில் மற்றைய இரு மாணவர்களும் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட இரு மாணவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்

## ‘ஒரு நாடு; ஒரே சட்டம்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியினூடாக செயலணியின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயலணியின் பதவிக்காலம் கடந்த 27ஆம் திகதி நிறைவடைந்தது. அதற்கமைய, செயலணியின் பதவிக் காலத்தை மேலும் 3 வாரங்களுக்கு நீடித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

## தீவகத்தில் கரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடந்த 27 ஆம் திகதி மீன்பிடிக்க புறப்பட்ட ஓர் நாட்டுப் படகில் 34 மூடை விவசாய கிருமிநாசினிகள் ஏற்றி வந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

இலங்கை கடற்படையினர் இடையில் குறுக்கிட்டமையால் கடத்தல்காரர்கள் அனைத்து மூடைகளைகளையும் தூக்கிக் கடலில் வீசி விட்டு மீண்டும் தமிழகப் பக்கம் திரும்பித் தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறு வீசப்பட்ட மூடைகள் தற்போது அனலைதீவு, நெடுந்தீவு கடற்கரைகளில் கரை ஒதுங்குகின்றன. அதில் இரு மூடைகள் நேற்றும் நேற்று முன்தினமும் கரை ஒதுங்கியுள்ளன.

## கச்சைதீவை இந்தியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழர்களும் ஒன்றுதான், இந்தியத் தமிழர்களும் ஒன்றுதான்.

தமிழக மீனவர்களைத் தவிர நம் நாட்டினுடைய தெற்குப் பகுதி மீனவர்களுடைய பாதிப்பும் எங்களுடைய வடக்கு மீனவர்களுக்கு இருக்கின்றது. மட்டக்களப்பிலிருந்து முல்லைத்தீவு வரையான கடற்பரப்பில் சிங்கள மீனவர்கள் எங்களுடைய வளங்களைச் சுரண்டிக் கொண்டு செல்கின்றார்கள். இதனால் எங்களுடைய தமிழ் மீனவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். இதன் காரணமாக சுயாதீனமாக நம்மவர்கள் கடற்தொழில் மேற்கொள்வதற்கு நெடுந்தீவு பகுதி கச்சதீவு பகுதிகளே களமாக இருக்கின்றது. இவ்வாறான நிலையில் கச்சதீவை இந்தியா மீளப்பெறுவது என்பது எங்களுடைய மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் என்பதை மிகவும் அனுதாபத்துடன் ஸ்டாலினிடம் தெரிவிக்கிறேன். – என்றார்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ‘21’ எனும் கண்துடைப்பு

நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் ஒரு சில அதிகாரங்களைக் குறைக்க வழி செய்யக் கூடிய 21ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் இன்று கட்சித் தலைவர்களின் கூட்டடத்தில் முடிவு எடுக்கப்படவிருக்கின்றது.

நாடாளுமன்றுக்கு அரசுத் தரப்பினால் முன்வைக்கப்படக் கூடிய 21ஆவது அரசமைப்புத் திருத்த நகலை வரும் திங்களன்று அமைச்சரவை இறுதி செய்ய இருக்கின்றது என்றும் –

அது தொடர்பில் கட்சித் தலைவர்களின் கருத்துக்களை உள்வாங்குவதற்காக இன்றைய கூட்டம் கூட்டப்படுகின்றது என்றும் –

புதிய நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

இந்த 21 ஆவது திருத்தம் தொடர்பில் கோட்டாபய – ரணில் அரசு இன்று தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டியிருக்கும். ஆனால் அது மிகச் சிக்கலானது; நெருக்கடியானது.

இவ்விடயத்தில் எதிரும் புதிருமாக முரண்பட்டு நிற்கும் தரப்புகளை ஒன்றுபடுத்துவது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலையாக இருக்கும்.

ஆனாலும், ஆளும் தரப்புக்கு சாதகமான ஓர் அம்சம் உண்டு. அது கவனிக்கத் தக்கது.

ஆகக் குறைந்தது அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மூலம் வெட்டிக் குறைக்கப்பட்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் அனைத்தும் 21ஆவது திருத்தத்தின் மூலம் திரும்பவும் அகற்றப்பட வேண்டும் என்பதே பிரதான பல கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கின்றது.

ஏன், கடந்த மாத முற்பகுதியில் தாம் பிரதமராக இருந்த போது இவ்விடயத்தை ஒட்டித் தாம் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் மஹிந்த ராஜபக்ஷ கூட அதனைத்தான் வெளிப்படுத்தி இருந்தார்.

ஆனால், ஆளும் தரப்பு இப்போது கோடி காட்டியிருக்கும் முன்வரைவில் 19ஆம் திருத்தம் மூலம் குறைக்கப்பட்ட ஜனாதிபதியின் பல அதிகாரங்கள் மீளவும் அவரிடம் இருப்பதை உறுதிப்படுத்தும் நிலைமையே உள்ளது.

அதனால் எதிர்க்கட்சிகள் பலவும், அந்த அதிகாரங்கள் அகற்றப்படுகின்றமையை உறுதிப்படுத்தும் விதத்தில் வரைவு மாற்றப்பட வேண்டும் என வலியுறுத்தும் என்பது நிச்சயம்.

அப்படி மாற்றங்கள் கொண்டு வரப்படாவிட்டால் திருத்தத்தைத் தாங்கள் ஆதரிக்க மாட்டார்கள் என எதிர்க்கட்சிகள் இன்றைய கூட்டத்தில் அடம் பிடிக்கலாம். ஆனால் அதற்காக 21ஆவது திருத்தம் நாடாளுமன்றுக்கு வரும் போது அவை அதனை ஆதரிக்காமல் இருக்கவே முடியாது என்பதுதான் யதார்த்தப் புறநிலையாகும்.

எதிர்க்கட்சிகள் வலியுறுத்தும் விதத்திலான அதிகாரங்கள் ஜனாதிபதியிடமிருந்து வெட்டுப்படாவிட்டாலும், ஏதோ சில அதிகாரங்களை ஜனாதிபதி இழக்கும் விதத்தில் அந்த வரைவு வருவதால் அதனைச் சட்டாக்குவதற்காகவாவது இந்த வரைவை எதிர்க்கட்சிகள் ஆதரித்துத்தானாக வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் இந்தக் கட்டாய நிலைமையை வசமாகப் பயன்படுத்தி, தனக்கு விருப்பமான வகையில், அதிகாரங்களைக் குறைக்கும் கண்துடைப்பு நாடகம் ஒன்றையே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது அரங்கேற்றுகின்றார்.

அதில், பஸில் ராஜபக்ஷவின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றோர் எம்.பிக்களாக இருக்க முடியாது என்ற சரத்தும் இடம்பெறுகின்றதா என்பது பெரும்பாலும் இன்று இறுதி செய்யப்பட்டு உறுதியாக வெளிப்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

# பயங்கரவாதத் தடைச்சட்டம் தடுப்புக்காவலில் உள்ளவர்களை அதிலிருந்து மீளவரமுடியாத கரும்பக்கத்துக்குள் தள்ளுகின்றது!

## சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கருத்து

பயங்கரவாதத்தடைச்சட்டம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் அதிலிருந்து மீண்டு வெளியே வரமுடியாதளவிற்கு அவர்களை சட்டரீதியான கரும்பக்கத்திற்குள் தள்ளியிருக்கின்றது.

நான் ஒரு சட்டத்தரணியாகவும் பெருமளவான சட்ட உதவி மற்றும் அனைவரினதும் அவதானத்தைக்கொண்ட நபராக இருந்த போதிலும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டமை மிகவும் கடினமான விடயமாகவே இருந்தது.

இருப்பினும்அவ்வாறுதடுத்துவைக்கப்பட்டுள்ள பலர் அதற்கு எதிராகப் போராடக்கூடிய சக்தியைக் கொண்டிராதவர்களாக இருக்கின்றனர் என சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

சிவில் சமூக அமைப்புக்களின் உலகளாவிய கூட்டணி என்ற அமைப்பிற்கு வழங்கியுள்ள நேர்காணலொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்நேர்காணலில் கூறியுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு –

நான் கைதுசெய்யப்பட்டமை அரசாங்கத்தால் முஸ்லிம்கள் நடத்தப்படும் முறையை விமர்சனத்துக்கு உட்படுத்துகின்ற – தெரிவுசெய்யப்பட்ட முஸ்லிம்கள் சிலரை அடக்குவதுடன், உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பில் அவர்கள்மீது பழிசுமத்துவதற்கான முயற்சியின் ஓரங்கமாக இருக்கக் கூடும்.

இப்போதுவிடுதலையாகிஇருப்பதென்பது மீண்டும் பிறந்ததைப்போன்று உணரச்செய்கின்றது. நான் எனது வாழ்க்கையை மெதுவாக மீளக்கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கின்றேன். நான் சிறைப்படுத்தப்பட்டமை எனது குடும்பத்தாரின் அன்றாட வாழ்க்கை மீது மிக ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் அனைவரினது வாழ்க்கையும் சுமார் இருவருடகாலமாக ஒரே இடத்தில் நின்றுவிட்டது.

ஆனால் பிணையில் விடுதலையாகி இருப்பதென்பது அத்தனை இலகுவான விடயமல்ல. நான் எப்போதும் எனது வழக்கு விசாரணைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றம் தொடர்பாகத் தொடர்ந்து கரிசனையுடன் இருக்கின்றேன்.

அடுத்ததாகப் பயங்கரவாத் தடைச்சட்டம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் அதிலிருந்து மீண்டு வெளியே வரமுடியாதளவிற்கு அவர்களை சட்டரீதியான கரும்பக்கத்திற்குள் (இக்கட்டான சூழ்நிலைக்குள்) தள்ளியிருக்கின்றது.

நான் ஒரு சட்டத்தரணியாகவும் பெருமளவான சட்ட உதவி மற்றும் அனைவரினதும் அவதானத்தைக் கொண்ட நபராக இருந்த போதிலும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்டமை மிகவும் கடினமான விடயமாகவே இருந்தது. இருப்பினும் அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள பலர் அதற்கு எதிராகப் போராடக்கூடிய சக்தியைக் கொண்டிராதவர்களாக உள்ளனர்.

அவர்கள் எம்மைத் தனிப்பட்ட ரீதியிலும், ஓர் சமூகமாகவும் அமைதிப்படுத்த முயற்சித்தார்கள். அந்தவகையில்நான்கைதுசெய்யப்பட்டமை உலகின் பல்வேறு நாடுகளிலும் சட்டத்தரணிகள் கைதுசெய்யப்படும் சம்பவங்களிலிருந்து வேறுபட்டதல்ல என்றே கூற வேண்டும். எம்மை நிறுத்துவதற்காகவும், அமைதிப்படுத்துவதற்காகவும், ஏனையோர் மத்தியில் அச்சத்தை விதைப்பதற்காகவும் அவர்கள் எம்மைக் கைதுசெய்தார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் எனக்குக் கிடைக்கப்பெற்ற ஆதரவிற்கும், என்னை பிணையில் விடுவிப்பதற்கு சட்டமா அதிபரை இணங்கக் காரணமாக அமைந்த உள்ளக மற்றும் சர்வதேச அழுத்தங்களுக்கும் நன்றியுடையவனாக இருக்கின்றேன். – என்று தெரிவித்துள்ளார்.

# ஏ - 9 வீதியை மறித்து கிளிநொச்சியில் போராட்டம்



கிளிநொச்சியில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொள்வதற்கு அதிகாலை முதல் காத்திருந்த மக்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை தொடர்ந்து எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு மக்கள் தினமும் நீண்ட வரிசைகளில் காத்திருந்து வருகின்றனர்

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை கிளிநொச்சிக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வந்துள்ள நிலையில் அவற்றை பெற்றுக் கொள்வதற்காக நேற்று அதிகாலை முதல் நீண்ட வரிசையில் காத்திருந்த போதும் சமையல் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படாததையடுத்து நீண்ட வரிசையில் காத்திருந்த மக்கள் எரிவாயு சிலிண்டர்களை ஏ-9 வீதியின் குறுக்காக வைத்து வீதியை மறித்து போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு கிளிநொச்சி பொலிஸார் விரைந்து நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எரிவாயு சிலிண்டர் விநியோகஸ்தருடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சின் அடிப்படையில் டோக்கன் வழங்கப்பட்டு எரிவாயு சிலிண்டர் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையையடுத்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

## ஜப்பான் - இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வருட இறுதிக்குள் இலங்கைக்கு அறுநூறு கோடி அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன் போது தெரிவித்தார்.

இதன்படி, இலங்கையின் கடனை செலுத்த ஐந்நூறு கோடி டொலர்களும், வெளிநாட்டு கையிருப்பினை வலுப்படுத்த நூறுகோடிடொலர்களும்தேவைப்படுகின்றன எனப் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடந்து வருவதாகவும், மாத இறுதிக்குள் அது முடிவடையும் எனத் தாம் நம்புகிறார் எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

நிதி மற்றும் சட்ட ஆலோசகர்களை நியமித்தமையைத் தொடர்ந்து, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் பிரதிநிதிகளுக்கு விளக்கினார்.

உதவும் நாடுகளுடன் பேச்சுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜப்பானுடன் செய்து கொள்ளப்பட்ட மின்சார ரயில் திட்டத்தை கொழும்பு ஒரு தலைப்பட்சமாக கைவிடத் தீர்மானித்தமை ஜப்பானை பெரும் அதிருப்திக்குள் ஆழ்த்தியுள்ளது என்று முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.




**சேக்கிழார் பெருமான் குருபூசை நாளை**

- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா)

# தமிழ் இலக்கியத்தில் முத்திரை பதித்த திருவருட் புலவர்!

இலக்கியம் என்றால் இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுவது என்பதுதான் அதற்கான பொருத்தமான பொருளாகியிருக்கிறது. அந்த இலக்கு எது என்பதைத் தெரிந்து கொள்ளுதல்தான் மிகவும் முக்கிய நிலையாகும். கற்பவர்க்கு இன்பத்தைப்பயப்பதுடன் அவர்களின் வாழ்வைத் திருத்திச் செம்மை செய்வதாய் இருக்க வேண்டும் என்னும் ஒரு கருத்தும், படிக்கும் பொழுதே இன்பத்தைப் பயப்பதைத் தவிர வேறொன்றுமே இல்லை என்றும், வேறு பயனை விளைவிக்கவும் கூடாது என்னும் கருத்தும் இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறு காணப்படும் கருத்தில் – முதலாவது கருத்தினையே தமிழ் இலக்கியங்களும், அதனைப் படைத்த ஆளுமைகளும்அகமிருத்திக்கொண்டார்கள். இந்த நோக்கை நன்றாகவே தனது குறிக்கோளாக்கிக் கொண்டவர்தான் சேக்கிழார். இவரைப் பல கோணங்களில் பார்ப்பதும் பொருத்தமாய் அமையுமென்று கருதுகிறேன்.அந்த வகையில் இவரின் சிறப்புக்கான காரணந்தான் என்னவாக இருக்க முடியும் ?

பக்திச் சுவை நனி சொட்ட சொட்ட பாடியதால் சேக்கிழார் சிறப்புப் பெறுகிறாரா? புதிய உத்தியைக் கையாண்டமையால் சேக்கிழார் உயர்ச்சி பெறுகின்றாரா? முதலமைச்சர் ஆகவிருந்தமையால் சிறப்புப் பெறுகின்றாரா? புரட்சிகரமான கருத்துக்களை முன்வைத்தமையால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா? அல்லது பெரிய புராணத்தைத் தந்தமையால் சிறப்பும் உயர்வும் பெறுகின்றாரா?

சேக்கிழார்வாழ்ந்தகாலம்சோழப்பெருமன்னர்களின் ஆட்சிக் காலமாகும். சோழர்கள் படைநடத்திப் பெரும் வெற்றிகளைக் குவித்தார்கள். நாடு செல்வத்தில் சிறப்புற்றது. அரசர்களின் புகழ் பாடுவதிலேயே அனைவரும் இருக்கும் நிலையும் காணப்பட்டது. அப்படியான வேளையில் சேக்கிழார் சோழ அரசபையில் பொறுப்பு வாய்ந்த முதல் அமைச்சராய் அமர்ந்திருக்கின்றார். வெற்றிச் செருக்கென்பது வீழ்ச்சிக்கே இட்டுச் செல்ல வல்லது என்பதை, வெற்றிக் களிப்பில் இருக்கும் எவருமே உணர்ந்திட மாட்டார்கள். மனம்போன போக்கில் மன்னர்கள் போகத் துடிப்பார்கள். மனத்தின் வழியே போய்க்கொண்டிருந்தால் முடிவில் வெற்றி என்பது வீழ்ச்சிக்கே வழிகோலியே விடும். அதனால் மனத்தை நல்வழியில் செலுத்தினால் நாடும் சிறக்கும். நாட்டு மக்களும் சிறப்பர். மன்னனும் வாழ்த்தப்படுவான் என்பதை – அமைச்சராக இருந்த சேக்கிழார் எண்ணிப் பார்க்கிறார்.

இந்த எண்ணத்தினால், பிற்காலச் சோழமன்னரது போக்கை சேக்கிழார் விரும்பவில்லை. அவர்களின் மனோபாபம் வேறுவிதமாகப் போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு நல்ல வழியைக் காட்டினால்தான் மக்களும்நாடும்மீண்டும்பழையநிலையை அடையமுடியும் என்று கருதினார். எனவே மன்னர்மனம்மாற, மக்கள்விழிப்புப்பெற, அவர் கையாண்ட வழிதான் – ஆண்டவன் அடியாரை அறிமுகப்படுத்தும் அதி உன்னத பணியாக அமைந்தது. அடியார்கள், ஆண்டவனைத் தவிர வேறெதையும் அகமிருத்தாதவர்கள். அவர்களின் குறிக்கோள் என்றுமே உயரிய அந்தப் பரம்பொருள் பற்றியதாகவே அமைந்திருந்தது. அங்கே சிற்றின்பத்துக்கு இடமே இல்லை. பேரின்பம் மட்டுமே பேசுபொருளாக இருந்தது எனலாம். வெற்றிக் களிப்பில் திளைத்த சோழ மன்னன் இவ்வுலக இன்பத்தை எடுத்து வழங்கி நின்ற சீவக சிந்தாமணியிலே மூழ்கிக் கிடந்தான். இந்த நிலை நீடித்தால் அது நல்விளைவினை நல்காது என்பதை முதலமைச்சராய் இருந்த சேக்கிழார் மனஞ் சொல்லியது. இதனால் மன்னனை மடை மாற்றம்செய்ய வேண்டியது மிகவும் அவசியம். அதுவே காலத்தின் கட்டாயம் என்றும் அவர் கருதினார். அந்தக் கருத்தின் பயனாக மலர்ந்ததுதான் பெரியபுராணம் என்னும் பக்திப் பொக்கிஷம் எனலாம்.

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரின் திருத்தொண்டர் தொகை, பத்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி இரண்டுந்தான் சேக்கிழார் மனத்தில் அமர்ந்து கொண்ட மிகவும் சிறந்த கருக்கள் எனலாம். இந்தக்கருக்களை மையப்படுத்தி, அரசனும் உய்ய வேண்டும், மக்களும் உய்ய வேண்டும் என்னும், வாழ்வியலும் உய்ய வேண்டும், என்னும் நோக்கில் தான் பெரியபுராணம் வந்து வாய்க்கிறது என்பதைக் கருத்திருத்த வேண்டும். அடியார்கள் பலரின் ஆன்மீகமும், அவர்களின் அகத்தின் பாங்கும் வெளிப்படும் வகையில் பெரிய புராணத்தை அமைத்திட அவர் கொண்ட முக்கிய நோக்கம் – உண்மையான இன்பம்என்றால்என்னவென்று அறியாமல் மனத்தை அலைக்கழித்து நிற்கும் சோழ மன்னன் , உண்மையான இன்பத்தை, நிலையான இன்பத்தை அறிய வேண்டும், அதன் வழியில் அவன் பயணப்படல் வேண்டும் என்பதற்கேயாம். குடிஉயரக் கோனுயர்வான் என்பதை நன்கு அறிந்தவராகச் சேக்கிழார் இருந்தபடியால் குடிகள் உயர்வுபெற வேண்டுமானால்,கோன் – அதாவது அரசர்களை – உயிர்ப்பூட்டவேண்டும் என எண்ணினார். அதனால் மன்னர் மனத்தில் இறையுணர்வை ஊட்டுவதே மிகச் சிறந்த வழி என்று அதனை மையமாகக் கொண்டு தான் பக்திச்சுவை சொட்டச் சொட்ட பெரிய புராணத்தை ஒரு காவியமாக்கிட எண்ணினார்.

ஆண்டவனின் மேல் அளவிட முடியாத நம்பிக்கை கொண்டவர் சேக்கிழார். அந்த ஆண்டவனையே மனமெண்ணி அரசனை அணுகினார். அரசனின் கையிலிருந்த சீவகசிந்தாமணி எந்தப் பயனுமே நல்காது, அதற்குப் பதிலாக இதனை நீங்கள் அறிந்தால் எல்லாமே வாய்க்கும் என்று நயமாக எடுத்துரைத்தார். ஆண்டவன் அனுக்கிரகம் வாய்க்கப் பெற்ற சேக்கிழார் வார்த்தைகள் அரசன் செவிகளில் புகுந்து, அவன் அகத்தினையும் தொட்டு நின்றது. ஆண்டவன் அடியார் பெருமைகளை அவனிடம் சொன்னார். அரசனும் மனநிலை தெளிந்தவனாய் உங்களின் உள்ளத்தில் உதித்த கருக்களைப் பாடுக எனப் பணித்தான். அரசே அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு என்னால் அடியார் வரலாற்றைப் பாட இயலாது. ஆகையால் ஆடம்பரமும் வேண்டாம், அரச போகமும் வேண்டாம், அமைச்சுப் பதவியையும் துறக்கிறேன் என்று கூறிவிட்டு ஆண்டவன் சன்னிதானத்தை அடைந்து அங்குதான் தன்னுடை அரிய பணியை ஆரம்பிக்கின்றார். உலகெலாம் என்னும் அடியானது அசரீரியாய் அமைந்திட பக்திப்பனுவலாய்ப் பெரியபுராணம் மாநிலம் செழிக்க, மன்னவன் பயனுற, மக்கள் உய்திபெற்றிட வந்தமைகிறது.

அமைச்சராய் இருந்த சேக்கிழாரின் புலமை சாதாரணமானதல்ல. கம்பரைப் போல கவிபாடும் ஆற்றல் அவரிடம் வாய்த்திருந்தது. அவரும் கம்பர் வழியில் காவியம் பாடியிருந்திருந்தால் சில வேளை கம்பராமாயணத்தைக் கூட விஞ்சியியும் இருந்திருக்க வாய்ப்பு வாய்த்தாலும்வாய்த்திருக்கும். ஆனால்சேக்கிழாரின் நோக்கம் அப்படியானதாக இருக்கவே இல்லை. அதனால்த்தான் அடியார்கள் வரலாற்றைத் தேடிப் பிடித்திருக்கிறார். தேடிப் பிடித்தமையோடு அமையாமல் அதனை எப்படிக் கொடுக்க வேண்டுமோ அப்படிக் கொடுத்தும் தன் குறிக்கோளில் வெற்றியும் பெற்றவராக ஆகியும் விடுகிறார்.

சேக்கிழார் காவியத்தின் பாடுபொருளே வித்தியாசமானதாகும். இளங்கோ அடிகள் சிலம்பினைப் பாட விளைந்த வேளை உயர்திணை அல்லா ஒன்றை பாடுபொருளாகக் கொண்டிருந்தார். அதனைத் தனது மனத்திற்கொண்ட காரணத்தால் சேக்கிழாரும் தொண்டையே கருப்பொருளாக்கி பெரியபுராணத்தை காவியமாகப் படைத்து விடுவதைக் காண்கின்றோம். அறுபத்து மூன்று அடியவர் கதைகளை வைத்துக் கொண்டு ஒருகாவியத்தைப் புனைவது என்பது இலகுவான காரியமல்ல. இதனை நன்கு மனத்திற் கொண்ட காரணத்தால் எப்படியும் இந்த அடியார்களை இணைப்பதற்கு ஒரு மார்க்கம் கிடைக்காதா என்று சிந்தித்த பொழுதுதான் – அடியார்கள் எவ்வாறு இருப்பினும் அவர்கள் யாவரிடமும் தொண்டு மனப்பாங்கு இருப்பதை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. எனவே இப்பொழுது அடியார்கள் தொகை அவருக்குப் பெரிதாகப்படவில்லை. அங்கே தொண்டுதான் தலைமை வகித்தது. எனவே தொண்டை மையமாக வைத்து தொண்டர் பெருமையை பறைசாற்றும் காவியத்தை எளிதாகப் புனைந்து எமக்காகவே வழங்கியிருக்கிறார். இது சேக்கிழாரின் பெருமை என்று தானே சொல்ல வேண்டும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும், நம்பியும், பெரியபுராணத்தை அமைத்திட சேக்கிழாருக்கு பெரிதும் கைகொடுத்தார்கள் என்பது மறுப்பதற்கில்லை. அவர்களின் பேருதவியைப் பெற்று நின்ற சேக்கிழார் அவற்றோடு மட்டும் நின்றுவிடவில்லை என்பதும் நோக்கத்தக்கது. அடியார்கள் பற்றிய விடயங்களையெல்லாம் ஆதாரத்துடன் எடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தால் ஊர்கள் தோறும் சென்று பல தகவல்களையும் எடுப்பதில் அயராது நிற்கிறார். அமைச்சராக இருந்த காரணத்தால் அவர் ஊர்கள் தோறும் சென்று பல வரலாற்றுத் தகவல்களையும் கல்வெட்டுப் போன்றவற்றையும் ஆராயும் நுண்மாண் நுழைபுலத்தைத் தன்னகத்தே கொண்டவராக விளங்கினார் என்பதும் கவனத்துக்குரியதாகும். இதனால் அவரின் காவியமான பெரியபுராணம் தலை நிமிர்ந்து நிற்கின்ற நிலைக்கு வந்தமைந்தது. இது அவருக்கு உயர்வையும் சிறப்பையும் அளிக்கத்தானே செய்யும்!

பக்தியை ஊட்டுவதற்குப் பாடப்பட்டது தான் பெரியபுராணம். எனினும் சேக்கிழார் அதன் ஊடாக பல சமூக சீர்திருத்தங்களையும் துணிந்து செய்ய நினைக்கின்றார் . இது அவரின் பெரும் சமூக அக்கறையினையே காட்டி நிற்கிறது. பல விடயங்களையும் கற்றுத் தேர்ந்தவர் என்ற காரணத்தால்த்தான் சோழமன்னனே அவருக்கு முதல் அமைச்சர் பதவி வழங்கி பெருமைப்படுத்துகின்றார். ஆட்சியில் அதிகாரத் தில் இருந்து வேலை பார்த்தவருக்கு நாட் டின் நிலை, அங்கு வாழும் மக்களின் நிலை பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பிருந்தது.தனக்குக் கிடைத்த அனுபவங்களின் வெளிப்பாடுகளை பெரிய புராணத்தில் கொண்டுவந்து நிறுத்துவதன் மூலம் அவர் தனது சமூக அக்கறையினை சொல்லியும் நிற்கிறார் எனலாம்.

பெரியபுராணத்தில் இடம்பெறுகின்ற அடியவர்களைப் பார்க்கின்ற பொழுது அவர்கள் யாவருமே வெவ்வேறு சமூக நிலையில் இருந்து வந்தவர்களாகவே காணப்படுகிறார்கள். அந்தணர் இருக்கிறார். அரசர் இருக்கிறார். புலையர், வேட்டுவர், மீன்பிடிகாரர், வண்ணார், குயவர், மரமேறுபவர்கள், செக்கார், ஆதிசைவர், வேளாளர்... இப்படிப் பல சாதிப் பிரிவினரும் இருக்கிறார்கள். இப்படியானவர்களையெல்லாம் தமது ஒப்பற்ற காவியமான பெரியபுராணத்தில் காட்டி அவர்களை வணங்கத்தக்க நிலைக்கு கொண்டு வந்தமையினை என்னவென்று நோக்குவது? இதனைச் சேக்கிழாரின் புரட்சி என்பதா? அல்லது அவருக்கு வாய்த்திட்ட சமூக அக்கறை என்பதா? அல்லது அளவுக்கு மிஞ்சிய தனித் துணிச்சல் என்பதா? ஆணென்றோ, பெண்ணென்றோ பார்க்கவில்லை. அவர்களின், பொருளாதார ஏற்றத்தாழ்வு, கல்வியறிவு, சாதி, எதையுமே அவர் கருத்தில் கொள்ளவும் இல்லை. இவர்கள் அனைவரையும் சமயம் என்னும் வரம்புக்குள் நிறுத்தி – இவர்கள் அனைவரும் இறைவனுக்குத் தொண்டு செய்கின்ற நிலையில் போற்றப்பட வேண்டியவர்கள் என்று காட்டி இருக்கும் சேக்கிழாரின் துணிச்சலைக் கட்டாயம் வியந்து பார்க்கவே வேண்டியிருக்கிறது.

சமூகத்தில் சாதிக்கட்டுப்பாடு என்பது மிகவும் இறுக்கமாக இருந்திருக்கிறது என்பதைப் பெரியபுராணத்தின் வாயிலாக வருகின்ற அடியார்களின் வரலாற்றைக் கொண்டு அறிந்திட முடிகிறது. அது மட்டுமல்ல, சமுதாயக் கட்டுப்பாடுகள் இறுக்கமாய் இருந்தமையால் பலர் ஆலயங்களுக்குள்பிரவேசிப்பதும், வணங்குவதும் கூட இயலாத ஒரு நிலை காணப்பட்டதையும் அறிந்திடக் கூடியதாகவும் இருக்கிறது. இதனைச் சேக்கிழார் மனித தர்மம் அற்றது எனக்கருதியிருக்கிறார். இதனால் தமது காவியத்தில் இடம்பெறுகின்ற அறுபத்து மூவரையும் அடியார்களாக்கி விடுகின்றார். பெரியபுராணத்தில் வருகின்ற அடியார்கள் பல சாதிகளைச் சேர்ந்திருந்த போதிலும் யாவரும் சிவமயமாக நின்று தொண்டையே தம்மனத்தில் இருத்திய காரணத்தால்சாதிஅடிபட்டுப்போவதையே நாம் இதன் மூலம் கண்டு கொள்ள முடிகிறது. ஆண்டவன் சன்னிதானத்தில் அனைவரும் சமம் என்னும் அரிய கருத்தை அனைவரதும் அகத்தினிலும் அமர்த்திட வேண்டும் என்னும் உயரிய, புரட்சிகரமான சிந்தனையால் சேக்கிழார் என்னும் தமிழ்ப் புலவர் சிறந்தோங்கப் பார்க்கப்படுகிறார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# சிங்கள – பௌத்த நாடு என்பதை ஏற்க நான் என்றும் தயாரில்லை!



## மனோ கணேசன் திட்டவட்டம்

என்னைப் பொறுத்தமட்டில் இலங்கை என்பது பன்மொழி, பல்லின மற்றும் பல்கலாசார நாடாகும். மாறாக இதனை சிங்கள, பௌத்த நாடு என்றோ அல்லது தனியொரு இனம் மற்றும் மொழியைக்கொண்ட நாடு என்றோ ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாரில்லை.

இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும், நாடு என்ற ரீதியில் முன்னோக்கிப் பயணிப்பதற்கும் இது பன்முகத்தன்மை வாய்ந்த நாடு என்பதை ஏற்றுக்கொள்வதும், இன, மத, மொழி அடையாளங்களுக்கு அப்பால் நாமனைவரும் 'இலங்கையர்' என்ற அடையாளத்தை முன்னிறுத்துவதும் இன்றியமையாததாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்பாடு தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பாக ஆராய்தல், புலனாய்வு செய்தல், அறிக்கையிடல் மற்றும் அவசியமான முன்மொழிவுகளைச்செய்தல் ஆகியவற்றுக்காக உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.டி .நவாஸ் தலைமையில் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் ஓய்வுபெற்ற மாவட்டச்செயலாளர் நிமல் அபேசிறி ஆகியோர் அடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகி இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், சிறுபான்மையின மக்கள் முகங்கொடுத்திருக்கும் பிரச்சினைகள், இன நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் சாட்சியமளிக்கையிலேயே தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் விவகார முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக்கூட்டணியின் தலைவருமான மனோகணேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் முன்னிலையில் அவரால் எடுத்துரைக்கப்பட்ட மேலும் பல முக்கிய விடயங்கள் வருமாறு –

இந்த ஆணைக்குழுவின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கக்கூடிய 'முன்னோக்கிப் பயணித்தல்' என்ற விடயம் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் முன்னோக்கிப் பயணித்தல் என்பது மிகவும் அவசியமானதொன்றாகும். என்னைப் பொறுத்தமட்டில் இலங்கை என்பது பன்மொழி, பல்லின மற்றும் பல்கலாசார நாடாகும். மாறாக இதனை சிங்கள, பௌத்த நாடு என்றோ அல்லது தனியொரு இனம் மற்றும் மொழியைக் கொண்ட நாடு என்றோ ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாரில்லை. இங்கு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டும் அரசகரும மொழிகளாகவும், ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் காணப்படுகின்றது. அதன்படி பன்முகத்தன்மை என்பது எமது நாட்டின் பலமாகும்.

ஆனால் அதனைப் பலவீனமாகக் கருதியதன் விளைவாகவே மிகச்சிறந்த பல விடயங்களை நாம் தவறவிட்டுவிட்டோம். குறிப்பாக 'தேசபிதா' டி.எஸ். சேனாநாயக்கவின் நடவடிக்கையால் 1948 ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளி தமிழ்மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமையும், எஸ்.டிபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவால் தனிச்சிங்களச்சட்டம் கொண்டுவரப்பட்டமையும் தமிழ்மக்களை வேதனைக்குட்படுத்தும் விடயங்களாக அமைந்தன.

டி.எஸ்.சேனாநாயக்கவின் நடவடிக்கைக்கு எதிராக அரசியல் தலைவர்கள் இணைந்து காலிமுகத்திடலில் நடத்திய போராட்டத்தில் எனது பாட்டனார் பழனிசாமி பிள்ளையும் பங்கேற்றிருந்தார். அதேபோன்று தனிச்சிங்களச்சட்டத்துக்கு எதிராக தந்தை செல்வா உள்ளிட்ட தலைவர்கள் காலிமுகத்திடலில் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் இப்போது காலிமுகத்திடலில் நடைபெறும் போராட்டத்தில் தமிழ்மக்கள் ஏன் பெருமளவிற்கு அக்கறை காண்பிக்கவில்லை என்று சிங்கள மக்கள் கேள்வி எழுப்பிவருகின்றனர். 'கடந்த சில மாதங்களாக உணவு உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டின் காரணமாக தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தமிழ்மக்களுக்கு இந்தப் போராட்டங்கள் புதிதல்ல' என்பதே அந்தக் கேள்விக்கு எனது பதிலாக இருந்திருக்கின்றது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்த மக்களின் எண்ணிக்கையை விடவும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான உணவுப்பொருள்களையே அரசாங்கம் அங்கு அனுப்பிவைத்தது. இவையனைத்தும் மிகமோசமான அரசாங்கங்களால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும். எனவே, பல காலமாக மின்சாரம், உணவுபோன்ற அத்தியாவசியத்தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாத நிலையிலிருந்த தமிழ்மக்களுக்குத் தற்போதைய நெருக்கடிகள் புதிதல்ல.

அதேபோன்று மலையகத் தமிழ்மக்களும் பெருமளவான நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்துவருகின்றனர். அவர்களுக்குரிய பாடசாலை, சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்கூட நாட்டின் தேசிய செயற்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்படவில்லை. 'எங்களையும் தேசிய நீரோட்டத்தினுள் உள்வாங்குங்கள். எங்களையும் இலங்கையர்களாக அங்கீகரியுங்கள். எம்மையும் மாவட்ட செயலகம் மற்றும் நகரசபை ஆகிய கட்டமைப்பின்கீழ் கொண்டுவாருங்கள்' என்பதே மலையக மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. இவையனைத்திற்கும் அடிப்படைக்காரணம் இனவாதம் மாத்திரமேயாகும். எனவே இது சிங்கள, தமிழ், முஸ்லிம், கத்தோலிக்க நாடு என்பதை முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அதுமாத்திரமன்றி இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும், நாடு என்ற ரீதியில் முன்னோக்கிப் பயணிப்பதற்கும் மேலும் சில விடயங்களுக்கு மதிப்பளிக்கவேண்டியது அவசியமாகும். முதலாவதாக இன, மத, மொழி அடையாளங்களுக்கு அப்பால் நாமனைவரும் 'இலங்கையர்' என்ற அடையாளத்தை முன்னிறுத்துவதும் இன்றியமையாததாகும். அதேபோன்று நாட்டின் பன்முகத்தன்மையை அங்கீகரித்தல், சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளித்து அனைவருக்கும் சட்டத்தை ஒரேவிதமாக நடைமுறைப்படுத்தல், அனைத்துத் தரப்பினருக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பனவும் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

மேலும் பயங்கரவாதத்தடைச்சட்டம் முழுமையாக இல்லாதொழிக்கப்படவேண்டும். நீண்டகாலமாக சிறையிலிருக்கும் அரசியல்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும். அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அதன்படி அதிகாரப்பரவலாக்கம் உறுதிசெய்யப்படுவதுடன், காலந்தாழ்த்தப்பட்டுள்ள மாகாண சபைத்தேர்தல்கள் விரைவாக நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதேபோன்று தற்போது தனிச்சட்டங்களாக இருக்கக்கூடிய கண்டியச்சட்டம், தேசவழமைச்சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் என்பன ஒரு முறையான கலந்துரையாடலின் பின்னர் அனைவருக்கும் ஏற்றவாறானதும் பொருத்தமானதுமான பொதுச்சட்டமாக மாற்றியமைக்கப்படுவதைத் தான் ஆதரிக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு கோப் குழு பரிந்துரை விடுத்துள்ளது

இந்திய கடனுதவி மற்றும் ஏனைய கடனுதவி திட்டங்களைப் பயன்படுத்தி மருந்து பற்றாக்குறையை தீர்க்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோப் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் இலங்கை அரச மருந்தக கூட்டுத்தாபனத்திற்கு பரிந்துரை செய்தார்.

மருந்துப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு டொலர் தட்டுப்பாடு நாட்டில் இருக்கவில்லை என்றும் மேற்படி நிதியை முகாமைத்துவம் செய்வதில் காணப்பட்ட சிக்கல் நிலைமையை தற்போது அவதானிப்பதாக கோப் குழுவின் தலைவர் அரச மருந்தக கூட்டுத்தாபன அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

கடந்த மாதம் 13ஆம் திகதி வரையில் அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துப் பற்றாக்குறை தொடர்பாகவும், தீர்வு தொடர்பில் ஆராயவும்,மற்றும் அடுத்தக்கட்ட செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை அரச மருந்தகங்கள் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் கோப் குழுவிற்கு அழைக்கப்பட்டனர். இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் 20 கோடி டொலர் நிதியுதவி கிடைக்கப்பெற்றிருந்த போதும் 2022. 04.22ஆம் திகதி வரையில் 5.55 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ உபகரண வழங்கல்களுக்கு மாத்திரம் அமைச்சின் மருத்துவ உப குழுவால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பாக நிதியுதவின் 28 சதவீதம் எனவும் 2022.05.18ஆம் திகதி வரை 9.22 கோடி அமெரிக்க டொலருக்கு அதிகமான விலைப்பட்டியல் மாத்திரம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக கோப் குழுவின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார். நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு காணப்படும் பட்சத்தில் இந்த நிதியைப் பயன்படுத்தி தேவையான மருந்துப் பொருள்களை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கோப் குழுவின் உறுப்பினர்கள் இதன்போது வலி யுறுத்தினர். இந்திய கடனுதவித் திட்டத்துக்கு மேலதிகமாக மருந்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கு கிடைத்துள்ள உலக வங்கி கடன், உலக சுகாதார தாபனத்தின் உதவி, ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள உதவி ஆகியவை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்திய கடனுதவி உள்ளிட்ட அனைத்து கடனுதவிகளும் 33 கோடி அமெரிக்க டொலர்களுக்கும் அதிகம் எனவும் இதுவரை அந்நிதி செலவிடப்படவில்லை எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

நிர்வாக தீர்மானங்கள் மற்றும் உரிய அனுமதியைப் பெற்று இந்த நிதியைப் பயன்படுத்தி மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்தால் 2023ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை மருந்துப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது என கோப் குழுவின் உறுப்பினர்கள் இதன்போது குறிப்பிட்டனர்.

மருந்துப் பற்றாக்குறைக்குத் தீர்வு காண கிடைக்கப்பெற்றுள்ள அமெரிக்க டொலர் நிதியை முறையாக முகாமைத்துவம் செய்து விரைவாக அவற்றை பயன்படுத்தவில்லை என்பது தெளிவாகுகிறது. மருந்து பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு டொலர் தட்டுப்பாடு நாட்டில் இருக்கவில்லை என்றும் முகாமைத்துவம் செய்வதில் காணப்பட்ட சிக்கல் நிலைமையை தற்போது அவதானிப்பதாக கோப் குழுவின் தலைவர் அதிகாரிகளிடம் தெரிவித்தார். மருந்துகளைக் கொள்வனவு செய்யும்போது ரூபா தட்டுப்பாடு காணப்பட்டதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.இதன்போது நிகழ்நிலை முறைமை ஊடாக நிதி அமைச்சின் செயலாளர் குழுவில் பங்குப்பற்றி ரூபா பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும்,விரைவாக தீர்வு காண நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் நிதியமைச்சின் செயலாளர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். வழங்கல்களை நிர்வகிப்பதற்காக அமைக்கப்பட்ட கணனிக் கட்டமைப்பு முறையாக செயற்படுத்தப்படாமை தொடர்பில் கோப் குழு அவதானம் செலுத்தியது.இந்த கட்டமைப்பை உருவாக்கும் நிறுவனத்துக்கு சுமார் 64 கோடியே 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளமையும்,அதன் பராமரிப்பிற்கு 50 லட்சம் ரூபா வழங்கப்படுகின்றமையும் கோப் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.இருப்பினும் அந்த கட்டமைப்பு முறையாக செயற்படவில்லை எனவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இருதய நோய் தொடர்பான அத்தியாவசிய மருந்துகள்,ரேபீஷ் நோய் தொடர்பான மருந்துகள்,மயக்க மருந்துகள் மற்றும் ஒவ்வாமை தொடர்பான அத்தியாவசிய மருந்து கொள்வனவில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாக இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

# இதற்குத் தானா, இருபத்தியொன்று?

## அக்கரை இக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

புதிய நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தேர்ந்த அரசியல்வாதி. அதை விட முக்கியமாக, அனுபவம் வாய்ந்த ஜனாதிபதிசட்டத்தரணி. 'ஸ்ரீலங்காபார்அசோசியேனின்' முன்னாள் தலைவர். கடந்த 2019 ஆம் ஆண்டு, ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர், தனக்கு காபினெட் அந்தஸ்து வழங்கப்படவில்லை என்று, கண்டியில் நடைபெற்ற அமைச்சரவையின் பதவியேற்பு வைபவத்தில் இருந்து துணிச்சலாக வெளியேறினார். இன்று, மாறுபட்ட சூழலில், புதிய ரணில் அமைச்சரவையில் காபினெட் அந்தஸ்துக் கிடைத்ததும், பதவியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.



பதவிதான், மனிதனை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது! முன்பு அமைச்சர் பதவி கிடைக்காத போது, நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது உள்ளிட்ட அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள் குறித்து அடித்துப் பேசி வந்தார். அடிக்கடி பேசி வந்தார். ஏன், ராஜபக்ஷ குடும்பத்தார் அனைவரும் அரசுப் பதவிகளைத் துறக்க வேண்டும் என்று நாடு தழுவிய போராட்டம் துவங்கிய காலகட்டத்திலும் தனது நிலையில் உறுதியாக இருந்தார்.

ஆனால், இன்றைய நிலைதான் என்ன? நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதை மறந்து விட்டார். மாறாக, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பது குறித்த, இருபத்தியோராவது சட்டத் திருத்த முன்வடிவை, காபினெட் முன் சமர்ப்பித்து, பின்னர் அது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் தொடர்பாடலைத் துவங்கி உள்ளார். அதாவது, நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஒழிப்பு என்பது இப்போதைக்கு இல்லை என்று சொல்லாமல் சொல்கிறார்.

இது கொள்கை ரீதியான முடிவு. ஏன், தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனநிலை மற்றும் ஆதரவு குறித்த நிதர்சனமான உண்மையும் கூட. ஆனால், அமைச்சர் விஜயதாஸவின் வேறொரு விதமான வாதம் நகைப்பிற்குரியது. அவரது சட்ட அறிவையே எள்ளி நகையாடுவது.

ஜனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என்று தொடரும் கோரிக்கை குறித்து, தான் அமைச்சரான பிறகு கருத்து கூறிய விஜயதாஸ, அவ்வாறு நடைபெற்றால், பஸில் ராஜபக்ஷ அந்தப் பதவிக்கு வந்து விடுவார் என்று மக்களை பயமுறுத்தி உள்ளார். அவர் கூறியமை போல், ஜனாதிபதி பதவி விலகினால், அவரைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவரே அந்தப் பதவியில் அமர முடியும் என்று அரசியல் யாப்பு சொல்கிறது. தற்போதைய நாடாளுமன்றத்தில், பஸில் ஆதரவு எம்.பிக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் என்ற அமைச்சரது கருத்தையும், ஒரு வாதத்திற்காக ஏற்றுக்கொள்வோம்.

ஆனால், ஜனாதிபதி பதவி குறித்து, யாப்பு என்ன சொல்கிறது? பஸிலைப் போல இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள், ஜனாதிபதிப் பதவியில் அமர முடியாது என்பது நாட்டின் தற்போதைய சட்டம். அதன் காரணமாகவே, கோட்டாபய மிகுந்த தயக்கத்துடன், கடைசி நிமிடம் வரை காத்திருந்து, தனது அமெரிக்கக் குடியுரிமையை ரத்து செய்து கொண்டார். பஸிலுக்கு, இன்னமும் கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை.

ஆனால், கோட்டாபய ராஜினாமாச் செய்தால், நாடாளுமன்றம் பஸிலை, எவ்வாறு, அவரது, இடைப்பட்ட காலத்திற்கு, ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்க முடியும்? இந்த அரசின் இருபதாவது சட்டத் திருத்தம் என்பது, பஸில் இரட்டைக் குடியுரிமையை வைத்துக் கொண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஏன் அமைச்சராகவும் ஆவதற்கு மட்டுமே வழிவகை செய்தது.

பஸில், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் நிதி அமைச்சர் ஆனது, தற்போதைய அரசு, உயர் நீதிமன்றத் தீர்ப்பை, இருபதாவது சட்டத் திருத்தம் மூலம் மாற்றி அமைத்ததால் மட்டுமே முடிந்தது. முந்தைய ஆட்சிக்காலத்தில், இன்றைய ஆளும் கட்சி உறுப்பினரும் திரைப்பட நடிகையுமான கீதா குமாரசிங்கே வழக்கில், இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள், இந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க முடியாது என்று உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதே கீதா குமாரசிங்கே, தனது சுவிட்ஸர்லாந்து நாட்டுக் குடியுரிமையை ரத்துச் செய்து விட்டு, மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானார். கடந்த மே 9 ஆம் திகதி அமைதிப் போராளிகளை, ஆளும் கட்சிக் குண்டர்கள் தாக்கியமையைத் தொடர்ந்து தென்னிலங்கை தழுவி அரங்கேறிய தீவைப்பு சம்பவங்களில், கீதாவின் வீடும் தீக்கிரையானது. அது குறித்து அவரும் பிற ஆளும் கட்சி உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் கதறி அழுதமை குறித்து, நாட்டின் பத்திரிகைகள் ஒரு வரி செய்தி கூட வெளியிடாதது வேறு விடயம்.



ஆனால், கேட்பதற்கு ஆள் இருந்தால், கேப்பையிலும் நெய் வழியும், என்று பஸில் பதில் ஜனாதிபதி ஆவது குறித்து, அமைச்சர் விஜயதாஸ நாட்டு மக்கள் அனைவரையுமே முட்டாள் ஆக்கியுள்ளார். அல்லது, அவ்வாறாக்க முயற்சித்துள்ளார்.

இதில் வருத்தப்பட வேண்டிய விடயம், அவரது இந்த கருத்தை எதிர்த்து, உண்மை நிலைமையை உணர்த்துவார் யாருமே இல்லை.

### எப்போது அடித்தால், எங்கே விழும்?

இதில் உண்மை என்னவோ, தற்போது பெரிதாகப் பேசப்படும், புதிய இருபத்தியோராவது சட்ட திருத்தத்தின் வரைவை, ஆளும் தரப்பு ஏற்றுக் கொண்டால் மட்டுமே நாடாளுமன்றத்தின் மூலம் அது நிறைவேற்றப்படும். வெளிப் பேச்சிற்கு அப்பால், கோட்டாவைப் பொறுத்தவரை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தில் எந்த அளவிற்குத் தியாகம் செய்ய அவர் உண்மையில் தயாராக இருக்கிறார், என்ற கேள்வியும் எழுகிறது.

இருபத்தியோராவது வரைவுச் சட்டத்தை எதிர்த்து, பஸில் ஆதரவு உறுப்பினர்கள் தெளிவாக இருக்கிறார்கள். அதாவது, பஸில் ராஜபக்ஷ தமது இரட்டைக் குடியுரிமையோடு கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தொடர வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார். மறக்கப்பட்ட மஹிந்தாவோ எப்போது அடித்தால், எங்கே விழும் என்று கணக்கு போட்டுக் கொண்டிருப்பார் என்று கருதலாம். இதில், அவர் முதலில் குறிவைப்பது, எதிர்க்கட்சியினரையா, அல்லது தனது சொந்தத் தம்பியான ஜனாதிபதி கோட்டாபயவையா என்பது பொறுத்திருந்து பார்க்கப் பட வேண்டிய விடயம்.



ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் யாவருமே அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையை இழந்து, மாதங்கள் உருண்டோடி விட்டன. அவர்களைப் பொறுத்தவரை, இந்த நாடாளுமன்றம் தனது முழு ஐந்து வருடகாலத்தை ஓட்டி விட்டால், அதுவே பெரிய விடயம். இதில் கொடுமை என்னவென்றால், உடனடியாக நாடாளுமன்ற தேர்தல் வர வேண்டும் என்று கோரிக்கை எழுப்பும் எந்தக் கட்சியும், எந்த எம்.பியும் கூட தங்கள் பதவியை ராஜினாமாச் செய்து, புதிய தேர்தலுக்கான ஒரு சூழலை உருவாக்கத் தயாராக இல்லை.

### கட்சி தாவல் சட்டம்

இந்தப்பின்னணியில், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, இருபத்தியோராவது சட்டத் திருத்த வரைவில் குறிப்பிட்டுள்ள ஒரு கருத்து வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. அது, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒரு கட்சியில் இருந்து வேறு ஒரு கட்சிக்கு மாறுவதற்கான கட்சித் தாவல் தடைச் சட்டம் குறித்தது. சஜித் பிரேமதாஸ தலைமையிலான அந்தக் கட்சி, கட்சித் தாவல் தடைச் சட்டத்தைக் கடுமையாக்க வேண்டும் என்று கூறி உள்ளது.

அதை விட முக்கியமானது, மக்கள் சக்தி கட்சி கூறியுள்ளது போல், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி மாறும்போது, அது குறித்த வழக்குகள் நேரடியாக உயர்நீதிமன்றத்திலேயே பதிவு செய்ய வகை செய்ய வேண்டும் என்பது. தற்போது, அத்தகைய வழக்குகள், கீழ்மை நீதிமன்றங்களில் துவங்கி, மேல்முறையீடு வழக்காக உச்ச நீதிமன்றம் சென்றடையும் போது, அந்த நாடாளுமன்றமே காலவதியாகி, அடுத்த தேர்தலும் கூட சில சமயம் நடந்து முடிந்திருக்கும்.

அண்டை நாடான இந்தியாவில், கட்சித் தாவல் தடைச் சட்டம் மூன்று,



நான்கு தசாப்தங்களாகச் செயல்பாட்டில் உள்ளது. அதனை எப்படியெல்லாம் தவறாகப்பயன்படுத்த முடியும்என்பதற்கு, இந்தியாவில், மாநில – மத்திய அரசு அளவிலான ஆளும் கட்சிகளின் செயல்பாடே சிறந்த எடுத்துக்காட்டு. அவற்றை, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்ற சட்ட வல்லுனர்கள் எவ்வளவுதான் கரைத்து குடித்து, அனைத்து ஓட்டைகளையும் அடைத்தோம் என நினைத்துக் கொண்டாலும், இலங்கையில் உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் அரச தலைமைகளும் கூட, புதிய சட்டத்தை, புதிய வழிகளில் தோற்கடிப்பார்கள்.

இதன் காரணமாகவே, கட்சித் தாவலை எதிர்க்கும் வழக்குகள், முதல் சுற்றிலேயே, உயர் நீதிமன்றத்திலேயே துவங்கி, அங்கேயே முடிய வேண்டும். அந்த வகையில், உயர்நீதிமன்றமும், கொவிட் போல் அல்லாத, சாதாரண காலகட்டங்களில், குறிப்பிடட காலத்தினுள் இத்தகைய வழக்குகளை நடத்தி முடிக்க வேண்டும் என்றும் சட்டத்தில் ஒரு பிரிவு இடம்பெற வேண்டும்.

ஒரு மாதம் இல்லை என்றாலும், உச்ச நீதிமன்றம் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் இந்த வழக்குகளை முடித்து வைத்தால் மட்டுமே, இத்தகைய சட்டத்தின் மீது, அரசியல்வாதிகளுக்குப் பயம் இருக்கும். மக்களுக்கும் மரியாதை பிறக்கும். அதிலும் குறிப்பாக, ஒரு கட்சியில் இருந்தோ, தேர்தலுக்குமுந்தையகூட்டணியில்இருந்தோ, ஒரு குறிப்பிட்ட சதவீதத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வேறொரு அணியில் இணைந்தால், அந்த வழக்குகளை அவசரகதியில் உச்ச நீதிமன்றம் கையாள வேண்டும்.

### கேலிப் பொருள்

இது போன்றே, ஜனாதிபதியின் எதேச்சதிகார அதிகாரங்களில் ஒன்று, மரண தண்டனை மற்றும் பிற தண்டனைகளை அனுபவிக்கும் நபர்களுக்கு கருணை அடிப்படையில் மன்னிப்பு வழங்குவது. ஜனாதிபதி கோட்டா அவ்வாறு விடுதலை செய்த ஆளும் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவிற்கான ஜனாதிபதியின் மன்னிப்பை உயர்நீதிமன்றம் தற்போது இடைநிறுத்தி வைத்துள்ளது. துமிந்தாவைப் போலவே, ஜனாதிபதி கோட்டா, இனப்போர் காலகட்டத்தில், எட்டுத் தமிழர்களை கொன்ற வழக்கில் மரண தண்டனை அளிக்கப்பட்ட சுனில் ரத்னாயக்கா என்ற இராணுவ வீரருக்கும் கருணை மன்னிப்பு வழங்கினார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

# இதற்குத் தானா..............

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், தனது பதவிக் காலம் முடிவடையும் நிலையில், 2005 ஆம் ஆண்டு அரங்கேறிய கொழும்பு றோயல்பார்க் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வந்த பெரிய குடும்பத்தைச் சேர்ந்த ஜூட் ஜெயமஹா என்ற இளைஞனை, கருணை அடிப்படையில் விடுதலை செய்தார். மேலும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறையில் இருந்து வந்த, பேரினவாத பொது பல சேனாவின் நிறுவுநர் ஞானசார தேரோவையும், நீதிமன்றத்தின் அனுமதி பெறாமலேயே, திருட்டுத்தனமாக விடுவித்தார்.

இந்தப் பின்னணியில், எதிர்க்கட்சி உறுப்பினரான முன்னாள் நடிகர், ரஞ்சன் ராமநாயக்காவின் சிறைத் தண்டனையை ஜனாதிபதி மன்னித்து, அவருக்கு விடுதலை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, சஜித் கட்சி முன்வைத்திருக்கும், இருபத்தியோராவது சட்டதிருத்த வடிவையே கேலிப் பொருள் ஆக்குகிறது. காரணம், ஞானசார தேரோவை போலவே, ராம நாயக்காவும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், சிறைத் தண்டனை அனுபவித்து வருபவர்.

**இந்திரா காந்தி வழக்கு**

ஜனாதிபதியின் கருணை - விடுதலை - அதிகாரத்தைக் கட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று கூறும் மக்கள் சக்தி, அதற்காக புதியதாக ஒரு கமிட்டியை அமைக்க வேண்டும் என்றும், அந்த கமிட்டியின்



அறிவுரைப்படியே ஜனாதிபதி நடக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது. இதில் பிரச்சினையே, இத்தகைய கமிட்டிகளை அமைப்பவர்களும் அரசியல்வாதிகளே. துமிந்த சில்வா போன்ற அரசியல் கொலையாளிகளைத் தவிர்த்து. பிற மரண தண்டனை கைதிகளின் குடும்பத்தினருக்கு இருக்கும் செல்வாக்கினால் இத்தகைய திட்டம் பாழடிக்கப்பட்டால், அப்போது வருத்தப்படுவதில் அர்த்தமில்லை.

மாறாக, இது போன்ற வழக்குகளில், இந்திய நடைமுறையை இலங்கை அரசு மற்றும் அரசியல் தரப்புகள் உற்று நோக்கி, தங்களது திட்டத்திற்கு உயிர் கொடுக்க நினைக்கலாம். இந்தியாவில், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை வழக்கில், அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம், ஜனாதிபதியின் கருணை - விடுதலை அதிகாரத்தை சீர்படுத்தியது.

இந்திய உச்ச நீதிமன்ற தீர்ப்பின் படி, கருணை - விடுதலைக்கான ஜனாதிபதியின் அதிகாரத்தை, தன்னிச்சையாக (subjective) பயன்படுத்த முடியாது. மாறாக, அத்தகைய முடிவு, மிகவும் கவனத்துடனும் கருதலுடனும் எடுக்கப்பட வேண்டிய முடிவு (objective). இந்திய அரசியல் அமைப்பின் பிற பிரிவுகளின் படி, அத்தகைய முடிவு, ஜனாதிபதியால் தன்னிச்சையாக, யாரையும் கலக்காமல் எடுத்துவிட முடியாது. மாறாக, பிரதமர் தலைமையிலான மத்திய அமைச்சரவையால் மட்டுமே அத்தகைய முடிவுகள் எடுக்க முடியும். ஜனாதிபதி அந்த முடிவை செயல்படுத்தும் கருவி. அவ்வளவுதான்.

இதன் முக்கிய அம்சம் என்னவென்றால், இவ்வாறு எடுக்கப்படும் முடிவை, பாதிக்கப்பட்டோர், உச்ச நீதிமன்றத்தில் எதிர்த்துக் கேள்வி எழுப்பலாம். அத்தகைய வழக்கில், நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது. அந்த வகையில், இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் படி, இந்திரா காந்தியை கொன்ற சத்வந்த் சிங் மற்றும் கெவல் சிங், ஆகியோர் அந்த நாட்டின் சட்டம் மற்றும் சட்ட மரபுகளின் படி, தூக்கிலிடப்பட்டனர்.

இடைப்பட்ட காலத்தில், இருவருடைய கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்தமையும், அதனை எதிர்த்து அவர்கள் உச்ச நீதிமன்றத்தை நாடியமையும், நீதிமன்றம் அவர்களது மனுக்களைத் தொடர்ந்து செல்லுபடி இல்லாமல் ஆக்கியதும் தனிக் கதை. அது போன்றே ராஜீவ் காந்தி படுகொலை வழக்கிலும் நடைபெற்றது. அதில் இந்திய உச்ச நீதிமன்றத்தால், மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டோர் பின்னாளில் விடுதலை செய்யப்பட்டமை, கருணை மனு அடிப்படையில் அல்ல. அவர்களின் மரண தண்டனையை மத்திய - மாநில அரசுகள் நிறைவேற்றக் காலதாமதம் செய்ததே காரணம். அதுவும் தனிக் கதை.

**எங்கே போனார்கள், இந்த மக்கள்?**

மற்றபடி, நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியை ஒழிப்பது, இடைப்பட்ட காலத்தில், இருபத்தியோராம் திருத்தத்தின் அடிப்படையில் கோட்டாவின் அதிகாரங்களைக் குறைப்பது எல்லாமே, வேலையற்ற வேலை. காரணம், அரசியல்வாதிகள் அல்லர், மக்கள், வாக்காளர்கள். எப்போது, ஒரு தலைவனோடு ஒரு கட்சியையும், நாட்டையும் ஒப்பிட்டு வாக்களிக்கிறார்களோ, அப்போதே அவர்கள், தங்களது உரிமைகளை, அவர்களுக்கு தானம் செய்து விடுகிறார்கள். குறைந்த பட்சம் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு, அடமானம் வைத்து விடுகிறார்கள்.

இதற்கு நிறையவே உதாரணங்கள் உண்டு. கடந்த 1956 ஆம் ஆண்டு, அன்று நாடாளுமன்ற தேர்தலில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு, மொத்தம் 95 இடங்களில் எட்டு ஆசனங்கள் மட்டுமே கிடைத்தன. அப்போது, பிரதமராகப் பதவியேற்ற பண்டாரநாயக்காவின் காட்டுத்தர்பார் ஆட்சியில்தான், தமிழ் இனத்தை ஒழித்துக் கட்டிய சிங்களம் மட்டும் என்ற ஆட்சி மொழி மாற்றம் முன்னெடுக்கப்பட்டது.

பண்டாரநாயக்க ஆட்சிக் காலத்திலும் அவரது படுகொலைக்குப் பின்னான அவரது மனைவி சிறிமாவோவின் ஆட்சியிலும்தான் சோஷலிச சித்தாந்தங்களின் அடிப்படையில், பொருளாதாரம் முதன்முறையாக சீர்குலைக்கப்பட்டது. போதாது என்று, அவரது இடதுசாரி அரசின் தோல்விகளின் காரணமாகவே, ஜே.வி.பி. போன்ற சிந்தாந்தம் சார்ந்த தீவிரவாத அணி தோன்றி, அடுத்த இருபத்தைந்து ஆண்டுகள், தென்னிலங்கையைத் திண்டாட அடித்தது.

இடைப்பட்ட காலத்தில், 1971 ஆம் ஆண்டு, பிரதமர் சிறிமாவோ, நாட்டிற்குப் புதியதொரு அரசியல் யாப்பையும் முன்வைத்தார். அதில், பௌத்தமே அரசு சார்ந்த மதம் என்று கூறி, இந்து மதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் ஆகியவை, பின் தள்ளப்பட்டன.

பின்னர், 1977 நாடாளுமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 168 இடங்களில் 140இல் வெற்றி பெற்று, ஐந்தில் நான்கு பங்கிற்கும் அதிகமாகவே வென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஜெயவர்த்தனா, முதல் நாளே நிறைவேற்று ஜனாதிபதியாகப் பதவியேற்கவில்லை. மாறாக, பிரதமராக மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவியேற்றார். பின்னர், சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூவின் அறிவுறுத்தலின் படி, மக்கள் தனக்கு அளித்த ஆணையை தவறாக பயன்படுத்தி, அரசியல் சட்டத்தையே மாற்றி, நிறைவேற்று ஜனாதிபதி பதவியைத் தனக்காகவே உருவாக்கிக் கொண்டார்.

பின்னர், ஜெயவர்தன, தன்னிச்சையாக, நாடாளுமன்றத்தின் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மாற்றிக் கொண்டார். அப்போதும், அதனை நாட்டு மக்கள்தான், பொது ஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகரித்தார்கள். அதனைச் சட்டமாகவும் மாற்றினார்கள். அப்போது எங்கே போனார்கள், இன்று, காலி முகத்திடலில் போராடும் மக்கள்? அவர்கள்தானே, ஒரு விதத்தில், நிறைவேற்று ஜனாதிபதி பதவியையே உருவாக்கியவர்கள்...!

**தலைமைத்துவ ஈர்ப்பு**

ஜெயவர்தனாவைத் தொடர்ந்து, ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா அம்மையார், மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய அனைவருமே, மக்கள் தங்களுக்கு அளித்த அபரிமிதமான வாக்குகளின் அடிப்படையிலேயே காய்களை நகர்த்தினர். என்ன, மஹிந்த, 2005 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த போது, பதவி ஆசையை காட்டி, பிற கட்சி உறுப்பினர்களை தனது பக்கத்திற்கு கொண்டு வந்ததன் மூலம், தனக்கு இல்லாத நாடாளுமன்றப் பெரும்பான்மையை, உறுதி செய்து கொண்டார். அதனால்தான், கட்சி மாற்றத் தடைச் சட்டம் அவசியமாகிறது.

ஆனால், அதே மஹிந்த 2010. தேர்தலில் அதீத அளவில் வெற்றி பெற்றமை, அது போன்றே அடுத்த 2015 தேர்தலில் தோல்வியுற்றமை இரண்டுமே, அவரது தனி மனித, தலைமைத்துவ ஈர்ப்பு சக்தி சார்ந்த விடயம். அதுவே, கடந்த 2019 - 20 தேர்தல்களிலும் அவருக்குக் கை கொடுத்தது. அப்பொழுது, மஹிந்தவின் இடத்தில் கோட்டாபய ஜனாதிபதியானமை அரசியல் சட்டம் சார்ந்த விடயம். மஹிந்தவின் ஆதரவு, அவரது கட்சிக்குள்ளேயே குறைந்ததால்



அல்ல.

அந்த விதத்தில், மஹிந்தவைப் பிரதமர் பதவியில் இருந்து விலக வைத்தமை அவரது குடும்பத்தினரை மட்டுமல்ல, அவரது கட்சியையும் இல்லாமல் ஆக்க வல்லது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடைபெற்றாலும், ராஜபக்ஷக்களின் தோல்வி உறுதி. அவர்களது இடத்தில், மிகப் பெரிய வெற்றி பெற்று பதவியில் அமரப்போவது, சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது கட்சியாகவும் இருக்கலாம்.

அதாவது, ஜெயவர்தனவின் காலம் போன்று, அல்லது மஹிந்தவின் காலம் போன்று, மீண்டும் உதயமாகும். அப்போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி இருந்தாலும், இல்லையென்றாலும், ஆளும் கட்சியின் தலைமை வைப்பதே சட்டமாகும். அப்போது, சஜித்தோ, வேறு யாரேனுமோ, அதிக அதிகாரம் பெற்ற பிரதமராக கூட இருக்கலாம். ஆனால். அந்தப் பிரதமரின் சொல்லும் செயலும், நாடாளுமன்றத்திலும் அவ்வாறே நிறைவேற்றப்படும். பாகுபலி திரைப்படத்தில், ரம்யா கிருஷ்ணன் சொன்னது போல, அத்தகைய தலைவர் சொல்வதே நாட்டின் சாசனமாகும்.

மற்றபடி, பெரிய பதவிகளுக்குப் பெயர்களை சிபாரிசு செய்வதற்கு, அரசமைப்புக் கவுன்சில் என்ற அமைப்பை மீண்டும் உருவாக்க வேண்டும் என்ற வாதமும் அபத்தமானது. காரணம், அரச தலைமை, அதிலும் குறிப்பாக காபினெட்டின் கடமையையும் உரிமையையும் வேறொரு அமைப்பிற்குத் தத்தம் செய்துவிட்ட பின்னர், அந்தப் பெரிய பதவி வகிப்போரை, அரசு எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? அவ்வாறு நியமிக்கப்பட்ட பொலிஸ் மாஅதிபர், புனித் ஜயசுந்தராவின் செயல்பாட்டைத் தான், உயிர்த்த ஞாயிறு வெடி குண்டு தாக்குதலின் போது, நாடே பார்த்து, பரவசமடைந்ததே.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வளர்ச்சி அடைந்த ஜனநாயக நாடுகளில், தேர்தல் வியூகங்கள் மற்றும் அரசு தலைமைகள் பெரும்பாலும் கட்சி தலைமைக்குக் கட்டுப்பட்டன. அல்லது, அவ்வாறான தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளது. இதில், ட்ரம்ப், சர்ச்சில், மார்க்கரெட் தாட்சர் போன்றோர் விதிவிலக்கு. இந்தியா, இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில், தேர்தல் ஜனநாயகம் தனி நபர்களைச் சுற்றியே செயல்படுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ, இந்திரா காந்தி ஆகியோரை உதாரணமாக எடுத்துக் கொண்டால், அவர்களே, தங்களது கட்சிகளின் வெற்றியை மட்டுமல்ல, தோல்வியையும் முடிவு செய்கிறார்கள். அந்த வகையில், அவர்கள் போன்ற தலைவர்களுக்கு எந்த பதவி கொடுப்பது என்பதல்ல இருபத்தியொன்றாவது சட்டத் திருத்த வரைவு சார்ந்த உண்மையான பிரச்சினை. மாறாக, அவர்கள் சார்ந்த கட்சிகளை முன்னிறுத்தி, மக்கள் வாக்களித்தால் மட்டுமே, அரசியல் நிலைமை சரி செய்யப்படும்!

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# அறத்திற்கு ஆதாரம்



எல்லா மதமும் மானுடத்துக்கு சொல்லும் கருத்து 'அன்பு'.

திருக்குரான் சொல்வதும் 'அன்பு'தான்.

பைபிள் சொல்வதும் 'அன்பு 'தான்.

இந்து மதமும் சொல்வதும் 'அன்பு'தான்.

அந்த உயர்ந்த விலை மதிப்பில்லா அன்பிலும் பிரச்சினை இருக்கிறது என்பதை அறிந்தது நம் தமிழ் மொழிதான்.

அன்பு காட்டுவதிலும் மானுடம் அளவு கோல் வைத்துள்ளது.

இங்கே யாரும் முழுமையாக அன்பு செலுத்துவர் இல்லை.

ஆக, மனிதன் அன்பையும் அளவு பார்த்து வெளிப்படுத்துவதால் அன்பு எப்படி உயரிய விழுமியமாகும் என்ற எண்ணம் தமிழுக்கு வந்திருக்க வேண்டும்.

உலகில் எந்த மதமோ, எந்த நாகரிகமோ நினைத்துக்கூடப் பார்க்க முடியாத ஓர் உயர்ந்த விழுமியத்தை இந்த மானுட வாழ்வியலுக்கு அறிமுகப்படுத்தியது தமிழ் மொழிதான் என்றால் அது மிகை ஆகாது.

அந்த உயரிய விழுமியம், அந்த மிக உயர்ந்த நிலை பொக்கிஷம், அந்த மகோன்னதமான மானுட நெறி தான் 'அறம்' எனப்படுகிறது.

வள்ளுவ பெருந்தகை அதிகாரம் நான்கில் அறம் பற்றி பத்து குறள் எழுதியுள்ளார் அறியுங்கள்.

' மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்திறன் ஆகுல நீர் பிற'

– என்ற குரலுக்கு இணங்க, ஒருவன் தன்மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும்.

மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மை வேண்டுபவை, உடையவை.

அறம் என்ற சொல்லுக்கு இணையான பதம் எந்த ஒரு மொழியிலும் இல்லை.

அறத்திற்கு ஆங்கிலத்தில் பல விளக்கங்கள் கொடுத்தாலும் அவையாவும் திருப்திகரமாக இருப்பது இல்லை.

அறத்திற்கு ஒரு சான்றுதான் சிலப்பதிகாரம்.

'தென்னவன் தீதிலன்'.

பாண்டிய மன்னன் குற்றமற்றவன்.

கண்ணகியும் ஒப்புக் கொள்கிறாள்.

கதாசிரியர் இளங்கோவடிகளும் நெடுஞ்செழியன் நல்லவன் என்று சான்று தருகிறார்.

கோவலன் மரணத்திற்கு தன் கவனக் குறைவும் ஒரு காரணம் என்று, 'யானோ அரசன் யானே கள்வன்' என்று உரைத்து அவன் உயிரை அவனே மாய்த்து தனக்கு தானே தண்டனை வழங்கிக் கொள்கிறான்.

சரி. கதை இதோடு முடிந்து இருக்க வேண்டுமே! ஏன் முடிக்கவில்லை?

கற்பின் மாண்பை, வலிமையை, சிறப்பை நிலை நாட்டவே கண்ணகி கதையின் இறுதியில் மதுரையை எரிக்கிறாள்.

சரி, கண்ணகியிடம் ஒரு கேள்வி.

உன்னை வரவேற்ற மதுரை,

உனக்கு வாழ்வு தந்த மதுரை,

நீ எரித்த மதுரை மக்கள் தானே உனக்கு ஆறுதலாக இருந்தார்கள்?

உன் துயரக்கதையை கேட்டார்கள்.

உன் பக்கத்துணையாக நின்றார்கள்.

அத்தனை பேரையும் சேர்த்து அல்லவா நீ எரித்தாய்?

அப்போது அந்த மதுரை மக்கள் மீது உனக்கு அன்பு இல்லையா?

இந்த கேள்வி அவளிடம் கேட்கத் தானே செய்கிறது.

இந்த கேள்விக்கு மணிமேகலையில் பதில் கூறப்படுகிறது.

ஆம் இதுவே நாகரிகத்தின் உச்சம்.

நாம் வைக்கும் கேள்வி, 'கற்பு' பெரியதா அல்லது 'அன்பு' பெரியதா?

இரண்டும் மிக உயர்வான விழுமியங்கள்.

இப்படி இந்த இரண்டு உயர்வான விழுமியங்கள் மோதும் போது இதற்குப் பதில் எப்படிக் கூறுவது?

இதில் எது சிறந்தது என்று கூறுவதற்கு உள்ளார்ந்த ஒளி வேண்டும்.

அந்த ஒளி வெளிக் காட்டுகிற உள்ளத்தில் துணிவு வேண்டும்.

மணிமேகலையில் மணிமேகலை கண்ணகி சிலை முன், கண்ணகி தெய்வத்தின் முன் நின்று கொண்டு, இந்தச் சிலிர்ப்பூட்டும் வரிகளைக் கண்ணகியைப் பார்த் துக் கேட்கிறாள்.

'கற்பு கடன் தீர்த்து அன்பு கடன் மறந்தனையே!'

அன்பு அல்லவா உன்னை வழி நடத்தி இருக்க வேண்டும்?

இதுவே அறம். ஆமாம்! மணிமேகலையின் கேள் வியே நானும் அறத்திற்கு கூறும் பதிலாகக் கொண்டேன்.

**- திருமதி ஜெ.சுகன்யா -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், பருத்தித்துறை )**

**செவ்வழி நயனத்திற்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் sevvalinayanamgmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம்.**

# பெரியபுராணம் படைத்தருளிய சேக்கிழாரின் குருபூசை நாளை

பெரியபுராணம் என்னும் அற்புத காவியத்தை ஆன்மிக உலகிற்கு அளித்தவர் சேக்கிழார். அவரது குருபூஜைத் தினம் நாளை.

இவர் காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூரில் பிறந்தவர். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் அருண்மொழி தேவர்.

சேக்கிழாரின் தந்தை, அநபாய சோழ மன்னனின் அமைச்சராக இருந்தார். அரண்மனைக்குச் செல்லும் போதெல்லாம், மகனையும் உடன் அழைத்து செல்வார். அங்கு நடக்கும் அரசியல் நடவடிக்கைகளை சேக்கிழார் கவனித்து வந்தமையால், அரசு நிர்வாக காரியங்களில் கை தேர்ந்தவர் ஆனார். அதனால், தந்தைக்குப் பின் சேக்கிழாருக்கு, முதலமைச்சர் பதவி வழங்கப் பட்டது.

சேக்கிழாரின் நிர்வாகத் திறனைப் பாராட்டிய மன்னன், அவருக்கு 'உத்தம சோழ பல்லவன்' என்ற பட்டத்தை வழங்கினார்.

ஒருமுறை, சேக்கிழார் கும்பகோணம் அருகிலுள்ள திருநாகேஸ்வரம் நாகநாதர் கோவிலுக்கு சென்றார். அங்குள்ள இறைவனைக் கண்டதும், அவருக்கு தன்னையறியாமல் கண்ணீர் வழிந்தது. உடலை இறைசக்தி ஆட்டுவித்தது போன்ற உணர்வு ஏற்பட்டது. அக்கணமே அரசபதவியை துறந்து, இறைப்பணிக்கு சென்று விட எண்ணினார். ஆனால், அதற்கான நேரம் இது வல்ல என்பதை உணர்ந்தார். காரணம், மன்னன் அநபாயன் சமண மத இலக்கியமான சீவக சிந்தாமணியைப் படித்து, சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடந்தான்.

மன்னனின் சமண மத ஈடுபாட்டை கண்டு கவலையடைந்த சேக்கிழார், இதை இப்படியே விட்டு விட்டால், சைவ சமயத்திற்கு ஆபத்து வந்துவிடும் எனக் கருதி, சைவ சமய நூல்களின் சிறப்பை விளக்கி, அவற்றை படிக்குமாறு மன்னனைத் தூண்டினார்.

சேக்கிழாரின் தூண்டுதலினால், சைவ மத நூல்களைப் படித்த மன்னன், சைவ சமயத்தின் அருமையை உணர்ந்து கொண்டான். மேலும் அந்நூல்களைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பினார்.

"அமைச்சரே, சிவக்கதைகளை உருவாக்கியது யார், அவை பழங்கால கதைகளா, இடைக் காலத்தில் உருவானவையா, அந்தக் கதைகள் குறித்த நூல்கள் இருக்கின்றனவா?"எனக் கேட்டான். சேக்கிழார் அதற்குரிய விளக்கத்தை எடுத்துக் கூறி, மன்னா. நம்பியாண்டார் நம்பி எழுதிய திருவந்தாதியை, ராஜராஜ சோழன் செப்பேடு செய்து, சைவ சமயத்தின் உண்மை நெறியை மக்களுக்கு கொண்டு சென்றார். அவர் பரம்பரையில் வந்த நீங்களும், சைவம் தழைக்க ஏதாவது செய்ய வேண்டும்." என்றார்.



மன்னனின் மனம் மாறியது. சிவபெருமானுக்கு சேவை செய்த திருத்தொண்டர்களின் கதையைத் தொகுக்கும் பொறுப்பை, சேக்கிழாரிடம் ஒப்படைத்தான்.

சேக்கிழார் சிதம்பரம் சென்று நடராஜரை வணங்கி, "தில்லையம்பலத்தானே! உன் அடியவர்களின் வரலாற்றை எழுத அடியெடுத்துக் கொடுக்க வேண்டும்." என்று வேண்டினார். அப்போது, 'உலகெலாம்' என்று குரல் கேட்டது. அவ்வார்த்தையை முதல் வார்த்தையாகக் கொண்டு, திருத்தொண்டர் புராணத்தை எழுத ஆரம்பித்தார் சேக்கிழார்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்று முதல் பாடல் தொடங்கி, 4,253 பாடல்களை எழுதி முடித்தார். மிக நீண்ட புராணம் என்பதாலும், பெரிய நூலாக இருந்தபடியாலும், அதற்கு, பெரியபுராணம்' என்ற பெயர் வந்தது. நூலை எழுதி முடித்த சேக்கிழார், நடராஜரின் பாதத்தில் அந்நூலை சமர்ப்பித்தார்.

சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று, பெரியபுராணம் அரங்கேற்றம் செய்யப்பட்டது. மன்னனின் தலைமையில், 63 நாயன்மார்களின் கதையை பாடி முடிக்க, சேக்கிழாருக்கு ஓர் ஆண்டு ஆனது. சொற்பொழிவு சமயத்தில், சேக்கிழாருக்கு வியர்த்துக் கொட்டியது. அநபாய மன்னனே அவருக்கு சாமரம் வீசினான். இது தமிழுக்கு கிடைத்த பெருமை.

இதன் பிறகு, சேக்கிழாரின் சகோதரர் பாலறாவாயர் சோழ நாட்டின் அமைச்சராக்கப்பட்டார். சேக்கிழார் தில்லை நடராஜரின் புகழ்பாடி, அவர் திருவடி சேர்ந்தார். தமிழுக்குப் பெருமை சேர்த்த சேக்கிழாரின் குருபூஜை, வைகாசி பூச நட்சத்திரத்தில் நடைபெறும். அவர் பிறந்த குன்றத்தூர் சேக்கிழார் கோவிலில், இந்த விழா 11 நாள்கள் நடத்தப்படுகின்றன.




# ஹலாசனம் (கலப்பை வடிவம்)

## செய்முறை

படி 1. விரிப்பின் மீது கால்களை ஒடுக்கி மல்லாந்து படுக்கவும். கைகளை தலைக்கு மேல் நீட்டப்பட்டிருக்கவும். உடல் நேர் கோட்டில் இருக்கவும்.

படி 2. இரு கால்களையும் மூச்சை இழுத்தவாறு மெதுவாக உயர்த்தவும். பக்கவாட்டுக்குக் கொண்டு வரவும்.

படி 3. கைகளையும் முழங்கைகளையும் பயன்படுத்தி புட்டத்தையும் உடலையும் உயரத்தூக்கி முழங்கைகளை தரையில் நன்றாக ஊன்றி முதுகை இரு உள்ளங் கைகளாலும் தாங்கிப் பிடிக்கவும்.

படி 4.உடலை மேலும் வளைத்து கால்விரல்கள் தலைக்கு மேல் தரையைத் தொடுமாறு செய்யவும். கால்களை மடிக்கக் கூடாது. உச்சநிலையில் ஆழமாக சுவாசிக்க வேண்டும்.

படி 5.பின் மூச்சை இழுத்தவாறு மூன்றாம் நிலைக்கு வந்து, இரண்டாம் நிலைக்கு வந்து, பின் முதலாம் நிலைக்கு அதாவது ஆரம்ப நிலைக்கு வரவும்.

## பலன்கள்

அஜீரணக் கோளாறுகள், வயிற்றுத்தசைகள் பலமடையும், தலை, மார்பு, வயிறு, கழுத்துப் பகுதிகளுக்கு அதிக இரத்தம் பாயும். இதன் மூலம் அவை சார்ந்த உறுப்புகள் நன்கு தூண்டப்படுகின்றன. நரம்புகள், தசைநார்கள், நாளமில்லா சுரப்பிகள் – குறிப்பாக பீனியல் பியூட்டரி, தைரொயிட், பராதைரொயிட், அட்ரீனல், சதையி முதலியவை – ஊக்கமடைகின்றன. முதுகெலும்பு, முள்ளந்தண்டுப்பகுதி நன்கு வளையும் தன்மை பெறும். இளமை, சுறுசுறுப்பு, ஆண்மை, பெண்மை அதிகரிக்கும். உள ரீதியிலான பிரச்சினைகள்(மனஅழுத்தம், நெருக்கீடு, பதற்றம், மனச்சோர்வு) நீங்கும்.எல்லா மூட்டுக்களின் நெகிழ்வுத் தன்மை அதிகரிக்கும். சிறுநீரக தொகுதி இனப்பெருக்கத் தொகுதியுடன் தொடர்பான உபாதைகள் நீங்கும்.

**- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# எத்தகைய சவால்கள் எமக்கு வந்தாலும் மக்கள் நலனை முன்னிறுத்தி செயற்படுக!

## திணைக்கள பிரதானிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்தல்

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி சூழலில், கடற்றொழில் அமைச்சிற்குள் உள்ளடங்கியுள்ள திணைக்களங்களால் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் கடற்றொழில் அமைச்சில் புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து இரத்னாயக்க மற்றும் கடற்றொழில் திணைக்களம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், நக்டா, நாரா, வடகடல், சீநோர் ஆகிய திணைக்களங்களின் நிறைவேற்று அதிகாரிகள், தாங்கள் எதிர்கொள்ளுகின்ற நடைமுறை சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கருத்துக்களை முன்வைத்துக் கலந்துரையாடினர்.

இலங்கை மீன்பிடித் துறைமுகத்தால், மீன்பிடிக் கலன்களுக்கான எரிபொருள்கள் விநியோகிக்கப்படுகின்ற நிலையில், தேவையானளவு எரிபொருள்களைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெற்றுக் கொள்வதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கடலுணவுகளைப் பாதுகாத்து சந்தைக்கு அனுப்புவதில் காணப்படுகின்ற சவால்கள் தொடர்பாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தான அதிகாரிகளால் எடுத்துக் கூறப்பட்ட நிலையில்,

நாட்டுக்கு குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற இறால் பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால்கள் உட்பட, பண்ணைகளில் வளர்க்கப்படுகின்ற கடலுணவுகளுக்கான உணவுகளை இறக்குமதி செய்வதற்குத் தடையாக டொலர் பற்றாக் குறை காணப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று, வடகடல் மற்றும் சீநோர் ஆகிய நிறுவனங்களின் உற்பத்திகளுக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

தற்போதைய சூழலில், எம்மிடம் இருக்கின்ற உற்பத்திசார் வேலைத் திட்டங்களை தனியார் முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புடன் முன்கொண்டு சென்று வருமானத்தை உருவாக்குவதற்கான வழிவகைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

எனினும், விரைவில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, எரிபொருள் போன்ற அடிப்படை தேவைகளை முடிந்தளவு பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து



சாதகமான முடிவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

மேலும், எவ்வாறான சவால்கள் ஏற்பட்டாலும் நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமான கடலுணவு தாராளமாக – நியாயமான விலையில் கிடைப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன், கடற்றொழில்சார் மக்களின் வாழ்வாதாரமும் பாதுகாக்கப்படும் வகையில், கடற்றொழில் அமைச்சு சார்ந்த அதிகாரிகளின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்று தெரிவித்தார்.

## கொழும்பு பல்கலைக்கழக மாணவர் பேரணிக்கு பொலிஸார் கோரிய தடை உத்தரவு நிராகரிப்பு!

நேற்று (வியாழக்கிழமை) கொழும்பில் பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிக்கு எதிராக தடை உத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை கொழும்பு பிரதான நீதிவான் நந்தன அமரசிங்க நிராகரித்துள்ளார்.

கொழும்பு, விகாரமஹாதேவி பூங்காவில் இருந்து வார்ட் பிளேஸில் உள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வரையான பல பாதைகளுக்குள் நுழைவதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கறுவாத்தோட்டம் பொலிஸார் நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனை நிராகரித்த நீதிவான், ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டம் ஒழுங்கை மீறும் வகையில் செயற்பட்டால் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 95ஆவது பிரிவின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

## யூரியா வழங்குவதற்கு உலக வங்கி இணக்கம்

எதிர்வரும் பெரும்போக பயிர்ச்செய்கைக்குத் தேவையான யூரியா பசளையை வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் உணவுப்பற்றாக்குறை நெருக்கடியின் ஆணிவேர் பிரச்சினையான இரசாயனப் பசளை பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு கமத்தொழில், வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். பல்வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளிடம் அது தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் வேண்டுகோள்கள் ஊடாக விவசாயிகளுக்குத் தேவையான பசளையை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகளில் அவர் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றார்.

அதன் ஒருகட்டமாக அமைச்சர் மஹிந்த அமரவீர மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்றுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது விவசாயிகளுக்கு சாதகமான பதில் கிடைத்துள்ளது. அதன்படி எதிர்வரும் பெரும்போக பயிர்ச் செய்கைக்குத் தேவையான யூரியா உரத்தை இலங்கைக்குப் பெற்றுக் கொடுக்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

# தமிழ் இலக்கியத்தில் முத்திரை .......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கி வைக்கப்பட்டவர்களை இன்று கோவில்கள் தோறும் சிலை வடிவில் உள்ளே வைத்து பூஜைகள் செய்தும், பெருவிழாஎடுத்தும், குருபூசை என்று குறித்துக் கொண்டாடியும் வருகின்றோம் என்றால், அந்தப் பெருமைக்கும் சிறப்புக்கும் சேக்கிழார்தான் காரணம் என்பதை எவருமே மறந்து விடமுடியாது.

சரித்திரம் என்பது வேறு. சம்பவம் என்பது வேறு. சம்பவங்களைச் சரித்திரமாக்கிய நிலையினை பெரிய புராணம் வாயிலாக சேக்கிழார் செய்திருக்கிறார். சமயத் தொண்டர்பற்றிக் கூறவந்தாலும், ஆயிரம் ஆண்டுகால தமிழ்ச்சமூகத்தின் வரலாற்றினையும், மொழிபற்றிய நிலையும், சமயங்களின் நிலையையும் முதன் முதலாகப் பதிவு செய்து வித்தியாசமான ஒரு பார்வையினை சேக்கிழார் காட்டியிருக்கிறார் என்பதை மறுத்துரைத்து விடல் முடியாது.

வீரம் என்றால் என்ன என்பதற்கு ஒரு புது விளக்கத்தைச் சேக்கிழார் காட்டுகிறார். வீரம் எனும் பொழுது – உடலில் மிக்க வலிமை கொண்டிருப்பதையும், போர்க்களங்கள் பலவற்றைக் கண்டு அங்கு பல வெற்றிகளைக் குவிப்பதையுமே சொல்லுவதுதான் வழக்கமாகிவிட்டது. ஆனால் சேக்கிழாரோ வீரத்துக்கும், வீரர்களுக்கும், வித்தியாசமான விளக்கத்தை அளித்து வீரம் என்பதற்கே புதுமையான கருத்தினை வெளிப்படுத்தி யாவரையும் வியக்கவே வைக்கின்றார். முதலமைச்சராகப் பதவியிலமர்ந்து பல போர்களைக் கண்டிருக்கும் அனுபவம் அவருக்கு வாய்த்திருக்கிறது. ஆனாலும் அவற்றில் ஈடுபட்டவர்களை வீரர் என்றோ, அவர்கள் பெற்றவை எல்லாமே வெற்றிதான் என்றோ அவரகம் ஏற்கவில்லை. அதாவது புறத்தே நடக்கும் போரைவிட அகத்தே நடக்கும் போரும் அதனை வெற்றி கொள்ளுதலுமே வீரமும் வெற்றியும் என்று வித்தியாசமாய் அவர் உணர்ந்து கொண்டார்.

இந்த வித்தியாசமான சிந்தனையினை வெளிப்படுத்திக் காட்டிட – தன்னுடைய காவியத்தில் ஒரு அடியாரைக் கொண்டுவந்து நிறுத்துகிறார். அவர்தான் திருநீலகண்ட நாயனார். திருநீலகண்டரின் வரலாற்றில் அவரிடம் காணப்படும் புலனடக்கத்தைக் காட்டி – அதற்கான ஒரு புது விளக்கத்தை வீரமாய் பார்க்கும் சேக்கிழார் பார்வை மிகவும் புதுமையான பார்வை என்றே எண்ணிட வைக்கிறது. இந்திரியங்களை வெல்லுவதுதான் உண்மையான வெற்றி. இந்திரியங்களை யாரொருவர் வெற்றி கொள்ளுகிறாரோ அவரே பகைகள் அற்றவராய் இருப்பார்கள் என்பதை உள்ளத்தில் இருத்திட சேக்கிழார் எண்ணிய பாங்கினை மெச்சாமல் இருந்திடவே இயலாதிருக்கிறது. தொண்டுள்ளம் வருவதற்கு இத்தகைய வெற்றி என்பதே இன்றியமையாததது என்பதுதான் சேக்கிழாரின் உறுதியான நிலையாகும். இதுவேதான் வீரம் என்றும், அதற்கான வெற்றி என்றும், ஒரு புதிய விளக்கத்தை சேக்கிழார் தருகின்ற நிலையில் அவர் புதுமையை, புரட்சியை, விதைப்பவராகவே வந்து நிற்கிறார்.

வீரம் என்னால் விளம்பும் தகையதோ என்னும் சேக்கிழார் வாக்கினை நோக்குதல் மிகவும் அவசியமானது. பற்றை நீக்கி குறிக்கோளுடன் துறவு மனப்பான்மை கொண்டு வாழும் தொண்டர்களின் நிலையினையே தன்னுடைய நோக்கினுக்கான விளக்கமாக்கி இருக்கிறார் என்பதுதான் மிகவும் முக்கியமாகும். அதேவேளை ஈர அன்பினர் யாதுங் குறைவிலார் – வீரம் என்னால் விளம்பும் தகையதோ என்று மொழிந்து அதற்கு உரிய சான்றாக சிறுத்தொண்டர், எறிபத்தர், வீரம்படைத் தவரானாலும் ஈரமும் கொண்டவர்கள் என்று தனது பார்வையின் விசாலத்தை பரவவிடுகிறார். நாவுக்கரசர் வீரத்தை, குங்கிலியக்கலையர், கண்ணப்பர், வீரத்தையெல்லாம் எளிதில் சொல்லிவிடமுடியாது என்று சேக்கிழார் காட்டுவது சேக்கிழாரின் புதுச்சிந்தனையை வெளிப்படுத்துவதாக தெரிகிறது அல்லவா? வீரத்துக்கு இவ்வளவு விளக்கமா என எண்ணத்தோன்றுகிறதா? வீரம் மிக்கவர்கள் ஆனாலும் ஈரமும் மிக்கவர் என்பதுதான் இங்கு சொல்லப்படும் முக்கிய சிந்தனை. இதனை ஈர அன்பினர் யாதும் குறையிலார் என்று சேக்கிழார் காட்டுவதை மனமிருத்தல் வேண்டும்.

பொதுவாக இலக்கியங்களில் பெண்களை அதாவது சமகால இலக்கியங்களில். அவள் வந்தாள் என்று விளிக்கப்பட்ட நிலையில் அதனைப் புறந்தள்ளி, பெண்களுக்கு மரியாதை கொடுத்து அவர் என்றும் வந்தார் என்றும் விழிக்கும் வண்ணம் சேக்கிழார் பெரியபுராணத்தில் அமைத்திருக்கும் பாங்கும் அவரின் புதிய சிந்தனையினையே வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

இலக்கியத்தில் பலசுவைகள் பாடப்படுகின்றன. எட்டுச்சுவைகள் என்பதுதான் வழக்கமாய் இருக்கிறது. ஆனால் சேக்கிழாரே புதுமையாய் சிந்தித்து ஒரு சுவையினைத் தொட்டிருக்கிறார். அதுதான் பக்திச் சுவை. பக்திச்சுவையினைப் பக்குவமாய் கையாண்ட பெரும் தமிழ் புலவராய் சேக்கிழாரே விளங்குகிறார். அவருக்கு முன்னோ அல்லது பின்னோ யாருமே இல்லை என்னும் அளவுக்கு பக்திச்சுவையினைக் கையாண்டு காவியம் படைத்தவர் என்னும் புத்திலக்கியச் சிற்பியாகவும் சேக்கிழாரே விளங்குகிறார். பக்தியினைக் காட்டும் வகையிலும் அவரது அணுகுமுறை புதுமையாய் இருப்பதையும் பெரியபுராணத்தால் அறிந்திட முடிகிறது. இதனால்தான் பக்திச்சுவை நனி சொட்ட சொட்டப் பாடிய கவி வலவ என்று ஏற்றி போற்றும் நிலைக்கு ஆளாகியிருக்கிறார்.

அன்பினைக் காட்டும் விதம், அறத்தினைக் காட்டும் விதம், அடியாரைக் காட்டும் விதம், கற்பனையைப் புகுத்தும் விதம், அனைத்திலும் புதுமையை, புரட்சியையே காட்ட விழைகிறார் சேக்கிழார் எனலாம். உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞானம் அத்தனையையும் காட்டுகிறார். அப்படிக் காட்டும் வேளை பழமைவாதியாக ஆகிவிடாமல் புதுமையினை, புரட்சியினை வெளிக்காட்டும் புதுமைப் புலவனாக, தெய்வீகப் புலவனாகவே தலை நிமிர்ந்து நிற்கிறார்.

**'என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
**ஒன்றும் காதலித்து உள்ளமும் ஓங்கிட**
**மன்றுளார் அடியாரவர் வான்புகழ்**
**நின்றதெங்கும் நிலவி உலகெலாம்'**

# ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் வகையில் அரசமைப்புத் திருத்தம் அமையக்கூடாது!

## எஸ்.எம்.மரிக்கார் வலியுறுத்து



ஐக்கிய மக்கள் சக்தியின் 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனில் , 19 ஆவது திருத்தம் மீண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதனை விடுத்து ராஜபக்ஷக்களை பாதுகாக்கும் வகையிலான அரசமைப்பு திருத்தம் முன்வைக்கப்படுமெனில் அதற்கு ஆதரவளிக்க வேண்டிய தேவை கிடையாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரது சகாக்களுக்கு வழங்கிய வரி சலுகையால் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார சுமை மீண்டும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுகருத்தில்லை. எனினும் உயர் வருமானம் கொண்ட வர்க்கத்தினருக்கும், குறைந்த வருமானம் கொண்ட வர்க்கத்தினருக்கும் சம அளவில் வரியை அறவிட எடுத்துள்ள தீர்மானம் பொறுத்தமற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களை பாதுகாப்பதற்காகவே இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

இந்த வரி அறவீட்டு முறைமையின் காரணமாகப் பல்பொருள் அங்காடிகள் செலுத்தும் வரிக்கு சமாந்தரமாக கிராம புறங்களிலுள்ள சில்லறை கடைகளும் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நடைமுறைகள் ஊடாக அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடியாது.

மாறாக, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நாடு வழமைக்கு திரும்ப வேண்டும். அதன் பின்னர் சுற்றுலாத்துறை வழமைக்குத் திரும்பும் பட்சத்தில் படிப்படியாக நெருக்கடிகளுக்குத் தீர்வு காண முடியும்.

ஆனால் சமையல் எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்கான 300 – 400 கோடியை கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

அவ்வாறெனில் அவருக்கு காணப்படும் சர்வதேச தொடர்புகளால் என்ன நன்மை? இன்னும் 3 மாதங்கள் சென்றாலும் தற்போதுள்ள அரசாங்கத்தால் நெருக்கடிகளுக்குத் தீர்வு வழங்க முடியாது.

மக்கள் ஆணைக்கு அமைய ஸ்திரமானதொரு அரசாங்கம் அமைக்கப்பட்டால் மாத்திரமே சர்வதேசம் இலங்கைக்கு உதவ முன்வரும்.

ஐக்கிய மக்கள் சக்தி சமர்ப்பித்துள்ள 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமெனில், 19 ஆவது திருத்தம் முழுமையாகக் கொண்டு வரப்பட வேண்டும். அதில் காணப்படும் எந்தவொரு விடயமும் நீக்கப்படக் கூடாது.

ஆனால் தற்போது நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள 21 ஆம் திருத்தத்துக்கும் 20 இற்கும் பெரியளவில் மாற்றங்கள் இல்லை. எனவே அதற்கு ஆதரவளிக்க வேண்டிய அவசியம் ஐக்கிய மக்கள் சக்திக்குக் கிடையாது.

அதே போன்று இரட்டை குடியுரிமை விவகாரமும் 19 இல் உள்ளதைப் போன்றே மீள நிறைவேற்றப்பட வேண்டும். அத்தோடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமின்றி மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட முக்கிய பதவிகளில் நியமிக்கப்படுவர்கள் கூட இரட்டை குடியுரிமையுடையவர்களாக இருக்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

காரணம் அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமித்தமையால் என்ன நடந்தது என்பதை அனைவரும் நன்கு அறிவர்.

எனவே 21 ஆவது திருத்தம் பஸில் ராஜபக்ஷவை மாத்திரமின்றி சகல ராஜபக்ஷக்களையும் அரசியலிலிருந்து முற்றாக நீக்கும் வகையிலேயே அமைய வேண்டும். – என்றார்.

# வெளிநாட்டவர்கள் சட்டரீதியாக பணம் அனுப்பினால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியுமாம்!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு கடன் இல்லாத வெளிநாட்டு செலாவணியை முடியுமானளவு நாட்டுக்கு கொண்டு வரவேண்டி இருக்கின்றது.

அதற்காக வெளிநாடுகளில் தொழில் செய்பவர்கள் தங்கள் பணத்தை சட்ட ரீதியாக, வங்கி ஊடாக அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

டொலர் பிரச்சினை காரணமாக மருந்துப் பொருள்களைக் கொண்டுவருவதற்கு முடியாமல் நோயாளர்கள் ஆபத்தான நிலைக்கு ஆளாகி உள்ளனர் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேல் மற்றும் ஜப்பான் நாடுகளில் தொழில் வாய்ப்பு கிடைத்த குழுவொன்றுக்கு விமான பற்றுச்சீட்டு கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை தொழில் அமைச்சில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு இன்று இக்கட்டானதொரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. இந்த நிலைக்கு நாட்டைத் தள்ளியவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும்.

என்றாலும் அதற்கு முன்னர் நாடு வீழ்த்தப்பட்டிருக்கும் நிலையில் இருந்து கட்டியெழுப்ப வேண்டி இருக்கின்றது.

நாட்டு மக்கள் உணவில்லாமல் இருக்கின்றனர். மருந்து இல்லாமல் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்கள் இறக்கின்றனர். 800 வகையான மருந்துப் பொருள்களுக்குத் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

அதேபோன்று காஸ் இல்லாமையால் நகர மக்கள் அவர்களது ஒருவேளை உணவை சமைத்துக்கொள்ள முடியாமல் இருக்கின்றனர்.

எரிபொருள்களின் விலை அதிகரித்துள்ளதால் அனைத்து பொருள்களதும் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. மருந்து இல்லாமல் தங்களின் பிள்ளை இறப்பதை தாய், தந்தைகளுக்குத் தாங்கிக்கொள்ள முடியாத வேதனையாகும்.

அதனால்தான் நாங்கள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசியல் தீர்மானம் ஒன்றை எடுத்தோம்.

அத்துடன் நானும் ஹரின் பெர்ணான்டோவும் நாட்டுக்குள் டொலரை எடுத்துவரும் பிரதான பொறுப்பை எடுத்திருக்கின்றோம்.

சரியான வழியில் டொலர்களை நாட்டுக்கு அனுப்பினால் காஸ் மற்றும் எரிபொருள் வரிசையை நிறுத்த முடியும். பிள்ளைகளுக்கு பால்மா, மருந்து வகைகளை பெற்றுக்கொடுக்க முடியுமாகின்றது.

வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து மாதாந்தம் கிடைக்கும் வருமான அளவு தற்போது 23 கோடி டொலர் வரை குறைந்திருக்கின்றது. வெளிநாட்டு தொழிலாளர்களிடமிருந்து 7,80 கோடி வரை இந்த நாட்டுக்கு அனுப்பிய வருடங்களும் இருக்கின்றன.

எனவே தொடர்ந்தும் நாடு கடன் இல்லாமல் இன்று வீழ்த்தப்பட்டிருக்கும் நிலையில் இருந்து மீட்பதற்கு வெளிநாட்டுகளில் தொழில் புரிபவர்களுக்கு முடியுமாக இருக்கின்றது.

அதனால் நாட்டை கடனாளியாக்குவதா, இல்லாவிட்டால் நாட்டுக்கு சக்தியாக இருந்து நாட்டை கட்டியெழுப்புவதா என்ற பொறுப்பு வெளிநாட்டுகளில் தொழில் செய்துவரும் இலங்கையர்களிடமே இருக்கின்றது.

# வைத்தியசாலையில் தீ விபத்து ஒரு பகுதி மருந்துகள் நாசம்!

வெல்லவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹிரிபிட்டிய பிராந்திய வைத்தியசாலையின் மருந்து களஞ்சிய சாலையில் தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கட்டடத்தை ஆய்வு செய்ததில், மருந்துகள் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அலுமாரிக்கு அருகில் மின் ஒழுக்கு ஏற்பட்டதன் காரணமாக தீப்பிடித்ததுள்ளமை தெரியவந்தது.

களஞ்சியசாலையில் இருந்த மருந்துகளில் ஒரு சிறிய பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெல்லவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொழிலாளர் திணைக்களம் வெள்ளிக்கிழமைகளில் பூட்டு

தொழிலாளர் திணைக்களம் மறு அறிவிப்பு வரும் வரை வெள்ளிக்கிழமைகளில் தமது அலுவலகங்களை மூட முடிவு செய்துள்ளது.

தொழிலாளர் ஆணையாளர் நாயகம் விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, தொழிலாளர் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் இம்மாதம் 3 ஆம் திகதி முதல் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

# சொத்து, உயிர் சேதம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு!

வீடுகளுக்கு தீ வைத்தமை, கொள்ளையிட்டமை, கொலை உள்ளிட்ட அனைத்து முறைமைகளிலும் சொத்துக்கள் மற்றும் உயிர் சேதம் விளைவித்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் ஜனாதிபதி விசாரணைக் குழு ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 31 ஆம் திகதி முதல் மே 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்திற்குள் நாட்டில் பல பிரதேசங்களிலும் இடம்பெற்ற இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி பீ.பீ.அலுவிஹாரவின் தலைமையில் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவில் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க, மேலதிக தலைமை மதிப்பீட்டாளர் வசந்த குமார ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாக செயற்படுகின்றனர்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் புவனேக ஹேரத் இந்தக் குழுவின் செயலாளராக செயற்படுவார். இந்த குழுவின் உறுப்பினர்கள் புதன்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து தமக்கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

# கொவிட் தொற்று நெருக்கடியால் சீனப் பொருளாதாரம் பின்னடைவு

## வேலையின்மை விகிதம் இரு ஆண்டுகளில் அதிகபட்சமாக 6.1 சதவீதமாக உயர்ந்தது



ஒரு காலத்தில் கொவிட் – 19 தொற்று நோய்க்கு எதிராக வலுவான பாதுகாப்பைப் பற்றி பெருமையாகக் கூறிய சீனா, இப்போது வைரஸின் வருகையால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சீனாவின் தேசிய புள்ளியியல் பணியகத்தின் படி, நுகர்வோர் செலவு மற்றும் தொழிற்சாலைகளின் உற்பத்தி பெறுபேறுகள் கடந்த மாதம் வீழ்ச்சியடைந்தன. அதே நேரத்தில் பெய்ஜிங் வளர்ச்சியை அதிகரிக்க பெய்ஜிங் கூறிய உள்கட்டமைப்பு முதலீட்டின் வளர்ச்சியும் கூடக் குறைந்துள்ளது.




கொள்கை ஆராய்ச்சி குழுவின் (POREG) கூற்றுப்படி, நாட்டின் கடுமையான தொற்றுநோய் நெறிமுறைகளால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சிக்கு மேலும் சான்றாக, வேலையின்மை விகிதம் இரண்டு ஆண்டுகளில் அதிகபட்சமாக 6.1 சதவீதமாக உயர்ந்துள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு தொற்றுநோய் முதன்முதலில் வெடித்ததிலிருந்து சீனா தன் தூண்டுதல்கள் இந்தக் கணக்கை பூஜ்ஜியமாக – முக்கியமாக விநியோகப் பக்கத்தில் – காட்டிக் கொண்டு இருந்தது என்று சிந்தனைக் குழு சுட்டிக்காட்டியது.

வைரஸின் பெரும் பொருளாதார பாதிப்பை சீனா எதிர்கொண்டுள்ள நிலையில், சீனப் பிரதமர் லீ கெகியாங், மேக்ரோ கொள்கைகளை செயல்படுத்துவதில் விரைவான வேகம் மற்றும் விரைவான முயற்சிகளுக்கு உத்தரவு விடுத்துள்ளார். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழுவின் அரசியல் பணியகத்தின் நிலைக் குழுவின் உறுப்பினராகவும் உள்ள லி, கடந்த வாரம் யுனான் மாகாணத்தில் நடைபெற்ற வளர்ச்சியை நிலைப்படுத்துவது குறித்த கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியபோது இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

Xinhua செய்தி நிறுவனம் படி, அவர் சந்தை நிறுவனங்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்தும் முயற்சிகளை எடுத்துரைத்து, நிலையான வளர்ச்சியின் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களை உயர்த்த அவர் வலியுறுத்தினார்.

உள்நாட்டு கொவிட் – 19 இன் மீளெழுச்சியின் புதிய அலை மற்றும் சர்வதேச சூழ்நிலையில் ஏற்படும் மாற்றங்கள் பொருளாதாரத்தின் மீது மேலும் கீழ்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன என்று குறிப்பிட்ட லி, சீனாவின் பதினைந்து கோடிக்கும் அதிகமான சந்தை நிறுவனங்கள், வலுவான பின்னடைவைச் சந்தித்திருப்பதை மேற்கோள் காட்டினார். பொதுவான, நிலையான விலைகளை எட்டுவதன் மூலமே நம்பிக்கையை ஏற்படுத்தலாம். அது முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார்.



வெள்ளம் போன்று அள்ளுப்பட்டு வரும் தூண்டுதலை – அழுத்தங்களை – தவிர்க்கவே நாங்கள் எப்போதும் வலியுறுத்தி வருகிறோம். 2020 இல் கொவிட்–19 எங்களை மிகவும் கடுமையாகத் தாக்கியபோதும் கூட, அதிகப்படியான காகித நாணயத்தை நாங்கள் வெளியிடவில்லை, என்று லி கூறினார்.



புதிய சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான கொள்கைத் தந்திரோபாயங்களுக்கு இன்னும் இடம் உள்ளது என்று கூறிய அவர், கொவிட்–19 கட்டுப்பாட்டை பொருளாதாரமற்றும்சமூகவளர்ச்சியுடன் ஒருங்கிணைக்கும் முயற்சிகளின் முக்கியத்துவத்தையும், மேக்ரோ ஒழுங்குமுறையை முடுக்கிவிடுவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

மத்திய பொருளாதார வேலைக் கருத்தரங்குகள் மற்றும் அரசாங்க பணி அறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும்பாலான கொள்கைகள் 2022 இன் முதல் பாதியில் செயல்படுத்தப்பட்டதால், பொருளாதாரத்தை விரைவாக மீண்டும் உரிய பாதைக்குக் கொண்டு வர, மே மாதத்தில் கூடுதல் நடவடிக்கைகளை முன்வைக்குமாறு உள்ளூர் அரசாங்கங்களுக்கு லி அழைப்பு விடுத்தார்.

வரிக் குறைப்புக்கள் மற்றும் பணத்தைத் திரும்பப் பெறுதல் உள்ளிட்ட நிவாரண நடவடிக்கைகளை நாடு முழுமையாக செயல்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும், இதனால் நிறுவனங்கள் கொள்கை ஆதரவை உடனடியாகவும் முழுமையாகவும் அனுபவிக்க முடியும் என்று லி கூறினார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவது குறித்துக் கருத்து வெளியிட்ட சீனப் பிரதமர், நாடு போதுமான தானிய உற்பத்தி மற்றும் எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும், விலைகளின் ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக இருக்கும் அனைத்து காரணிகளையும் பராமரிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்னார்.

தொழில்துறை மற்றும் விநியோகச் சங்கிலிகளை சீரமைக்க மேலிருந்து கீழ், கீழிருந்து மேல் இணைப்புகளில் உள்ள விநியோகப் பரிவர்த்தனைகளில் இருக்கக் கூடிய தடைகள் நீக்கப்பட வேண்டும் என்றும் லி கூறினார்.

(ஆங்கில மூலம்: Free Press Journal)

